அகஸ்தியன்.

திருவிதாங்கூர்
மஹாராஜா அவர்களின் ரக்ஷாதிகாரம் பெற்ற
பிரஹ்மநிஷ்டாமடம் சிற்சபைகளின்
பிரதான காரியாலயத்தினின்றும்
உலகநன்மைக் கெனவே உலவி வரும்

ஒரு இனிய தமிழ்

மாதாந்தப் பத்திரிகை.

புத்தகம் 1. | 1923-ஹூல ஜனவரி, பெப்ரவரி துந்துபிஹூல தை- மாசி மூ | இலக்கம் 5,6.

மனோயோக ரகசியம்.

பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனைக் காண்டல்.

பலவகை விருக்ஷ வர்க்கங்கள், கொடி செடிகள், கற்பாறைகள், பசுமையான புற்றரைகள் இவைகளால் நிறையப்பெற்றதோர் அரணியம். அதன் நடுவே ஒரு ஆற்றின் கரை மணற்குன்றிலே இப்பொழுது நாம் வாசஞ் செய்வதாக வைத்துக்கொள்வோம். இங்கு நம்மைச் சூழ்ந்துகாணப் படுகின்ற அற்புதக்காக்ஷியை என்னென்போம்! இங்கு நம் மனத்தின் உண்மைப் பெருமையை— அரிய பெரிய அனுபூதி இன்பத்தை— ஆதிகாலை தற்குப் பேரதி

ய இயற்கை உதவிகள் அமைந்துள்ளன. இந்த இடத்திலே நம மைச்சூழ்ந்து காண்கின்ற விருக்ஷஜாதிகளில் நம் காகுத்திக்கினிய தோர் விருக்ஷத்தைக் கருவியாகக்கொண்டு நம்பயிற்சியைத் தொட ங்குவோம்.

இப்பொழுது நாம் ஒரு விருக்ஷத்தைக் கூர்மையாகப் பார்க்கவேண்டும். இங்ஙனம் பார்க்குங்கால் நம்முடைய மனோ வியாபாரமானது அப்பார்வையின் வழியே வெளியிற் சென்று, அந்த விருக்ஷவடிவமாக அமைந்துகொள்ளும். மனதினுல் அந் த விருக்ஷத்தை "அடிமரம், பெரிய கொம்புகள், சிறிய கிளைகள், பச்சையிலைகள், பழுப்புகள், பூந்தளிர், அரும்பு, மலர், காய், கனி" என்ற பல பாகங்களாகப் பிரிக்கவேண்டும். அப்பால் அடிமரம் முதல், கனிகள்தாங்கிய நுனிக்கொம்புவரையுள்ள ஒவ்வொருபாக த்தையும் மூறையே மிக்க அக்கறையுடன் கூரிய பார்வையைச் செலுத்தி நுட்பமாக கவனித்தல் வேண்டும். மரத்தின் அடியிலி ருந்து நுனிவரைக்கும் நுனியிலிருந்து அடிவரைக்கும் மாற்றிமா றிப் பார்வைச் செலுத்துதலாகிய (அனுலோம பிரதிலோம) மூறையினுல் நன்றாகப் பார்வையைச் செலுத்தவேண்டும்; கவனி க்கவேண்டும். இந்த அப்பியாசத்தை ஆரம்பிக்குமுன் குறி த்த விருக்ஷத்தின் எதிரே நாம் ஒரு ஆசனத்தின் மீதமர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் நமது பயிற்சியைத் தொடங்க வேண்டும். இந்த சாக்ஷுஷ சக்திப் பிரயோக வித்தையை (கண்களின் வழியாக ஞானசக்திப் பிரயோகக் கல்வியை) தினந்தோறும் ஆவலுடன் ஆரம்பித்து நடத்தவேண்டும்.

சிறிதுநேரம் செலவிட்டால் போதுமானது. காட் செல்லு ந்தோறும் இந்தப் பார்வையின் சக்தியை விருக்ஷத்தின் மீது படி ப்படியாகப் பெருக்கிக்கொண்டு போகலாம். ஆனல் பயிற்சிசெய் யுங்காலத்தில் இப்பார்வையானது தேனெழுக்குப்போலும் இடை யறுது நடை பெறவேண்டும். இவ்வாறு சில தினங்களவரை செ ய்து வந்தால் கடைசியிலே நம்மனமானது விருக்ஷ வடிவமாகவே பூர்த்தியாகும். நம்மைச் சுற்றிலும் இந்த விருக்ஷத்தைத் தவிர அங்கி யமாக பரதொரு பெருள்களும் காணப்படமாட்டா. நம்மனத் தோற்றமானது இங்ஙனிலைக்கு வரும்பொழுது நம்முடைய "விருக்ஷ வடிவ மனோயோக அப்பியாச சக்தியானது மேலான நிலைமைக்கு வந்திருக்கின்றதென" நாம் நம்பலாம்.

இவ்வாறு விருக்ஷ வடிவத்தில் உயர்ந்த நிலைமையடைந்துள்ள மனோபாவனையுடன் நாம் எங்கு பார்த்தாலும் நம்முடைய மனதில் பதிந்துள்ள விருக்ஷ வடிவத்தைதை காலம்பேதமேயில்லாது மற்றொன்றையும் காணமாட்டோம். அப்பொழுது நாராயண வடிவங்களோடுகூடிய "எல்லாவிதமான உலகவிஷயங்களும் நம்முடைய பார்வையரிய மார்க்கத்தினின்றும் கழுவி மறைந்து விட்டன" என்று நம்முடைய பிரத்தியக்ஷ அனுபவம் நமக்கு நம்பிக்கையை உண்டுபண்ணும்.

இனி, இந்த விருக்ஷமில்லாத இடங்களிலும் "நாம்" விருக்ஷத்தைப்பார்க்க ஆரம்பிப்போம். அதாவது "அந்த விருக்ஷ வடிவம்— நம்முடைய ஹிருதயத்தில் பதிந்திருக்கின்ற விருக்ஷவடிவ ஸம்ஸ்காரத்தின் பரிபக்குவ தசையில்— எவ்வளவு தூரம் இடம் பிடித்திருக்கின்றது" என்பதை அந்த அப்பியாச முடிவுகில நமக்கு நன்றாக வெளியிடும். நாம் நம்முடைய மனோவியாபாரத்தை (மனச்செயலை) நேத்திரோந்திரியத்தின் வழியாக வெளியே செலுத்தி எங்கும் விருக்ஷ வடிவமாகச் செய்ததுபோல, நம்முடைய மனோவ்ருத்திகள் முழுதையும் "புத்தியாகிய உட்கலனின் வடிவே ஆன்மாவின் பக்கமாக (உள்ளே) செலுத்தி அந்த ஆன்மாவாகிய விருக்ஷத்தினது சத்து, சித்து, ஆனந்தம் என்னும் லக்ஷண வடிவங்களாகிய கிளை, காய், கனிகளாகச் சமையும்படி செய்ய வேண்டும். மரத்தினுடைய தியானம் நமக்கு வெகுதிடமான பொழுது விருக்ஷத்திற்கு அந்நியமாக யாதொன்றும் இல்லுலகிலே காணப்படாததுபோல, நமக்கு ஆன்மத்தியானம் திடப்படும் பொழுது ஆன்மாவிற்கு வேறாக— பேதமாக— இவ்வுலகிலே பாதொரு பொருள்களும் காணப்பட மாட்டா. இங்ஙனமிலே பயிற்சி பெற்ற அனுபவியாகிய ஒரு மகாத்துமா, நாராயணவடிவங்களோடு விளங்கும் மரங்களையாய்க் காண்கின்ற அகிலப்பிரபஞ்சப் பொருள்களையும் ஆன்மதொரூபமாகவே சதாகாலமுங்கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பார். அவரது தொல்புகள் யாவும் ஆன்மக்காக்ஷி பெறுமின் செய்ய வாதனின் அவை சகலவுயிர்களுக்கும் பக்ஷபாதமின்றி நன்மை யளிப்பனவாம். இங்ஙனமையினன்றே "சர்வம் ப்ரம்மமயம் ஜகத்" என்ற உபநிஷத் வாக்கியமும் மூசசறை னறது? இதனை எல்லோரும் எளிதில் அறிந்து மகிழுமாறு நமது திருவுட்பெருஞ் செல்வராகிய திருமூல நாயனாரும் பின்வருமாறு தமது அனுபவவுரைகளை வெளியிடுகின்றார் :—

"மரத்தை மறைத்தது மா மதயானை,
மரத்துள் மறைந்தது மா மதயானை;

பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்,
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்.''

இதன் பொருள் யாது? மரத்தினாற் செய்யப்பட்ட ஒரு யானை வாகனத்தை நாம் திருவிழாக்களிற் காண்கின்றோம். அதன் மீது ஈசனளுந்தருளச் செய்து ஊனக்கண்களாலும் ஆனந்திக்கின்றோம். அக்காட்சியின் உட்பொருளை நாம் இங்கு கூறிய ''மனோமயாக முறையிலே'' விளக்கினர் பெரியோர்.

அந்த யானை வாகனத்தை நோக்கி, இது மரத்தினாற் செய்யப் பெற்றது என நாம் நினைக்குங் காலை ''யானை'' என்ற உணர்வு மரத்துள் மறைந்து விடுகின்றது; ''இஃது யானை'' என நாம் கருதுங்கால் நமது அறிவினுள்ளே யானை வடிவந்தோன்றி, 'இஃது மரத்தினாலானது' என்ற தோற்றம் மறைந்தொழிகின்றது. மரம் என்று நினைத்தக்கால் 'யானை' என்ற பாவனையும் (எண்ணமும்) யானை என்று கருதுங்கால் 'மரம்' என்ற பாவனையும் இல்லை. இதுபோல, ''நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூத வடிவமாகத் தோன்று நின்ற இவ்வுலகத்தை ஐம்பூத மயமாக நாம் காணுங்கால் 'இஃது பரம்பொருளின் வடிவம்' என்ற உணர்வையிழக்கின்றோம். மண்ணினாலான குடம் மண்ணின் வடிவமேயாம் என்ற 'காரிய காரண அபேத நியாயங்கொண்டு, சுத்து, சித்து, ஆனந்தமே வடிவமாகக்கொண்ட பரம்பொருளினின்றுந் தோன்றிய இவ்விண்ணுதிப்பூதமெல்லாம் அபரம்பொருளின் வடிவமேயாம் என்ற பரம்பொருட்காக்ஷியறிவொடு நோக்குங்கால் மண்முதல் பூதங்கள் ஐந்தும் நம் கண்ணிலே காணுது ஐந்தும் விண்ணிலே மறைந்து யாவும் பரமாய்க் காணும். இந்தத் தோற்றநிலைமை ''தன்னுள்ளே கண்டு மகிழ்ந்த அருட்செல்வமாகிய'' தாயுமானாரும் ''பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணத்தமே!'' என வரம்விட்டுக் கூறியருள்வர். இதனையே ஸ்ரீ கீதாசாரியனும் ''ஊர்த்துவ மூலம்'' என்ற திருவாக்கினுள் மேலே ''வேரோடிச்சென்ற ※ அரசமரக்காக்ஷியைக் காணுமாறு'' அர்ச்சுனனை வற்புறுத்தினர். ஆகவே, பார்க்குமிடமெங்கும் பரமாய்க் கண்டு, அன்பும் சிவமும் இரண்டென்னும் அறிவிலாமைகொள்கையைநாடாது, அன்பே சிவம் ஆவதை யாவருமறிந்து, அன்பே சிவமாயமர்ந்து என்றும் சுன்னுத இன்ப வாழ்வை இம்மையுலகிலே— இச்சரீரத்திலே— அடைந்து அமரத்தன்மை பெறுமாறு செய்வதுதான் மதங்களின் முக்கிய உத்தேசமாகும்.

※ இஃது வேறோரிடத்து விளக்கப்படும்.

சுவையுள்ள குறிப்புகள்.

ரப்பர் (மரத்தின்) வித்தினின்றும் ஒருவிதம் எண்ணெய் எடுக்க லாமென்றும், இது தூற்றிற்கு காற்பத்தைந்து வீதம் கிடைக்குமென்றும் தெரிகின்றது. இந்த எண்ணெயிலிருந்து 'விகோலியம்' என்ற ஒரு ஔஷதமும், மென்மை பொருந்திய ஒருவகை சோப்புகளும் உண்டாக்குகின்றனர். சரீரகளின்மேல் ரப்பர்ப்பாலை உருக்கிவிட்டால் சரீரகளைப்பார்க்கினும் இருபங்கு காட்படக்கிடக்குமென்றும், வண்டிகளின் சத்தம் குறையுமென்றும், நிலத்தில் தார் பூசுவதனாலுண்டாகின்ற ஒரு தூற்றுச்சில் வாயுமண்டலங்களும் ஒருங்கே நீங்குமென்றும், இந்த வினமுறை இலங்கை காட்டில் பரீக்ஷார்த்தமாக அனுஷ்டிக்கப்பெறுவதாயும் அறிகின்றோம். ரப்பரின் மூலமாகக் காயிதம் உற்பத்தி செய்தலைப்பற்றி மூன்றாம் குறித்துள்ளோம். ஆகவே, எந்த வகையாகவேனும் ரப்பருக்கு ஒரு அதிருஷ்டவாழ்க்கை வந்தால் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு பிழைப்புண்டு.

நாடும் நகரமும்.

'கெட்டாலும் பட்டணஞ் சேரவேண்டும்' என்ற பழமொழி ஜனங்களுக்குவெகு தூரம் அனர்த்தத்தையுண்டாக்கிவிட்டது. இப்பழமொழியைப் பெருமைப்படுத்துவதற்காக நாட்டுவாசிகளெல்லாம் நகரவாசத்தை த்தமாஷாகக் கொண்டனர். இப்பொழுது எல்லாங்கூடி 'நகரவாசம்' நரக வாசமாகவந்து சேர்ந்தது. மிகமிக ஜனநெருக்கங்கொண்ட கல்கத்தா நகரத்தில் வாரம் ஒன்றுக்கு 500— 550 வீதம் மரணமாகின்றனர். சமீபத்தில் கண்ட கணக்குப்படிப் பார்த்தால் இந்தத் தொகை 2000 வீதம் செல்லுகின்றது. இந்த அபாயத்தை யுணர்ந்து ஜனங்கள் 'தமது வாசஸ்தலத்தை நாட்டுப்புறங்களுக்கு மாற்றிக்கொள்ளாவிட்டால்' காலஅளவில் கல்கத்தாவைப் போன்ற நகரங்களின் காசுத் என்னாகும்? இங்கு ஆயுளுக்காக சம்பாத்தியமா, சம்பாதிப்பதற்காக ஆயுளா என்ற கேள்வி குறுக்கிடுகின்றது! சுகாதாரமுறைப்படி நூட்பமாக கவனித்தால் ஜனப்புழுக்கத்தால் கொடிய உஷ்ணமும், உஷ்ணத்தால் காற்றிற்கு மிகுதியான இயக்கமும், அசுத்தத்தன்மையுமுண்டாகின்றது. காற்றின் வழியே தெற்றுநோய்கள் மிகுதியாகப் பரவுகின்றன. சமாசக்கணக்கின்படி பார்க்கும்பொழுது ஒரு மனிதன் 24 மணி நேரத்திற்குள்ளாக 9 மணங்கு கனமுள்ள ஆகாயத்தைச் சுவாசித்து அத்தனளவே வெளிவிடுகின்றான். ஒரு மனிதன் ஒரு நிமிஷநேரம் நிசுவாசிக்கின்ற (வெளிவிடுகின்ற) வெளிமூச்சானது $3\frac{1}{2}$ அடி பரப்புள்ள காற்றை அசுத்தமாக்கித் தீர்க்கின்றது. இந்தக்கணக்கின்படி 10 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஒரு அறையில் நடைந்திருக்கின்ற ஆகாயமானது 3 மணி 2 நிமிஷம் 5 வினாடிக்குள் ஒருமனிதன் அங்கு தங்கி உள்மூச்சு வெளிமூச்சு விடுதலாகிய உசுவாச நிசுவாசத்தால் உபயோகமற்றதாகி விடுகின்றதென சுகாதார (சாஸ்திர) போதினி கூறுகின்றது. ஒருவனது தேகத்தைக் கழுவின தண்ணீரை அல்லது வாய் கொப்பளித்த தண்ணீரை ஒருவரும் பானஞ்செய்ய விரும்

பார்கள்! ஆனால் சுவாசத்தால் வெளிப்படுத்தப்பட்ட காற்றானது அதிக அசுத்தமானதாகவும், பிராணவாயுத்தை யுண்பண்ணக்கூடியதாகவுமிருந்தும் ஜனங்கள் அந்த தத்துவத்தைக் கவனியாமல் மிகமிக நெருக்கமானவையும் அடைப்பானவையும் நிலம் நீர் இரண்டினுடைய சுத்தம் குறைந்தவையுமாகிய இடங்களில் பலர் ஒன்றுசேர்ந்து சிறிதும் அசங்கியப்படாமல் சுவாசிப்பது மிகவும் ஆச்சர்யமாயிருக்கின்றது என்பது மட்டுமல்ல: மறக்கமுடியாத அபாயச்செயலுமாகும். மனிதனுடைய மூகவாட்டம், தேகக்களைப்பு இவைகளை நீக்குவதற்கு உயர்தரமான உணவுப்பொருள்களும் மருந்துகளும் போதா. இந்த குணங்களையும் அளித்து மனக்களிப்பையும் ஆயுளாரோக்கியங்களையு மொருங்கே அளிக்கின்ற அநுபவ சித்தமான திவ்வீய ஔஷதம் பரிசுத்தமான காற்றுத்தான். இதை சுயேச்சையாக அனுபவிக்கும் பாக்கியம் பட்டினவாசிகளுக்கு இல்லை என்று நாம் உண்மை கூறினால் ஒருவருக்கும் மனவருத்தமிராதென்றே நம்புகின்றோம். எனவே, பட்டணவாசத்தை நரகவாசமென்றும், கிராந்தரவாசத்தையே நகர (அதாவது சாகரிக சுகமுள்ள) வாசமென்றும் கூறவேண்டும். இயன்றவரை பொதுஜனங்கள் இவ்வுண்மையறிந்து வாழ்தல்தான் 'உயிர்க்கு நன்மைதரும்' உபாயமாகும்.

சிரஞ்சீவியாக விரும்பினால்
மனத்தை இளமையாக வைத்திரு

வைத்துக்கொண்டிருக்தால் என்றும் இளமையாகவே இருக்கலாம் என்ற 'பாவனையின் ரகசியம்' இப்பொழுது பல மேனாட்டினர்க்கும் விளங்கி வருகின்றது. 1914-ம் வருஷம் கடை பெற்ற யுத்தத்திற்குச் சென்ற தனது கணவன் (இறந்துபோன விபரம்அறியாமலே) இனியும் வரப்போகின்றானென்ற மகிழ்ச்சியிலே மூழ்கியிருக்கும் ஒரு மேனாட்டுப்பெண் 'சென்ற பல வருஷங்களாக' ஒரே பருவத்தில் வாழ்ந்து வருகின்றனளாம். மனஸ்தத்துவ சாஸ்திரிகளுக்கு இங்கு தாராளமாக ஆராய்ச்சிக்கு இடமுண்டு. இந்த பாவனையின் சிறந்த முறைகளையும் அனுபவநுட்பங்களையும் 'மனோபாவனையினால் மரணத்தைத் தடுத்தல்' என்ற பகுதியில் அகஸ்தியன் விரிவாக விளக்கிக்கூறும்.

உறக்கவிழிப்பு.

இரவில் வெகுநேரம்வரை தூக்கம் விழிப்பது பெருங்கேடாகும். இந்தக்குற்றத்தை அதிகமாகச் செய்பவர்கள் 'மறுநாட்காலையிலே வயிற்றுக்குள் உணவு அனுப்புமுன்' முன்னிரவின் மீந்துள்ள நித்திரையைப் பரதியேனும் பூர்த்திசெய்தால் அந்தக் குற்றந்திருமென்று ஒரு வைத்தியப் பத்திரிகை கூறுகின்றது. பகலில் தூங்கிவழிவதைப் பார்க்கினும் முன் (இரவில்) தூங்கி, பின் (இரவில்) விழிக்கும் பழக்கமே உற்சாகமும் தெளிவுமுடையதாக அனுபவம் தெரிவிக்கின்றது.

* * * * *

"உள்ளம் பெருங்கோயில் ஊன உடம்பாலயம்
வள்ளற் பிரானுர்க்குவாய் கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப்புலனேந்துங் காளாமணிவிளக்கே"

என்ருர் திருமூலப்பெருமான். தேனினும் இனிய இவ்வருமந்திரம் குருலிங்கசங்கத்தினையடித்துப் படிக்கத்தக்கது. * * *

மனத்தீண்டல்-உடல்தீண்டல்.

சமக்குதோன்றுகின்ற விருப்பு வெறுப்புமுதலிய மனவிகாரங்கள் சரீரத்தை பலஹனப்படுத்துபவை என்பது சம்மனேவர்க்கும் தெரிந்ததே. இதன் விபரத்தை ஒரு ஆராய்ச்சிக்காரர் பின்வருமாறு விளக்குகின்ருர்:—

விருப்பு வெறுப்பு என்ற மனசெயல்கள்-எண்ணங்கள் மிகுதியாக மேன்மேலும் வளர்ந்துவரும் நிலையில் விஷங்களாகி, ஒவ்வொரு வகைதிரவங்களே சரீரத்தில் உண்டாக்கி விடுகின்றன; கோபம் விருத்தியாஞல் மஞ்சள்நிறத்திலுள்ள ஒருவித திரவமுண்டாகும்; அதனையெடுத்து மற்றுள்ளபிராணிகளின்மீது குத்திவற்றிஞல் அவைகளுக்கும் சுரம்பு பலஹனம் உண்டாகும்; இதுபோல், அருசையின் திரவத்தையும் எடுத்து ஒரு பன்றியின் உள்ளே செலுத்திப் பார்த்தப்பொழுது அது சில நிமிஷங்களுக்குள் இறந்துபொயிற்று. எண்ணங்களுக்கு உருவமுண்டு என்று இந்த வாக்குகள் தெரிவிக்கின்றன. இவை மனஸ்தத்துவசாஸ்திரத்தின் முக்கியமான படுதிகளாகும். ஒரு தாய் மிகக்கோபத்தோடு குழந்தைக்குப் பால்கொடுத்ததால் குழந்தை இறந்துபோனதாக சம்தானத்தினம் கூறுகின்றது. ஹிந்துக்களின் தத்துவசாஸ்திரமுறைப்படி சமது ஸ்தூலசரீரத்திற்கும் சூக்ஷமசரீரத்திற்கும் சொருங்கிய சம்பந்தமுண்டென்பதையும் இங்குசேர்த்து கோக்கும்பொழுது, "கோபம் சண்டாளம்" என்றபழமொழியின்உண்மையான கருத்து விளங்காமற்போகாது. ஸ்தூலசரீரத்தைப்பார்க்கிலும் சூக்ஷமசரீரம் 100 பங்கு வியாபாசக்தியுடையதாதலால், கோபதாபம், போராசை அருவை, நீர்த்தியை கிருபணத்தன்மை முதலிய குணங்கள் எவரது மனத்திலிருப்பதாக (அவரதுசெயலின் மூலமாக) மணம் வீசுகின்றதோ அச்சரீரத்தின் பக்கத்தே சொருங்கவேண்டாம் என்று சில புராதன ஹிந்துதத்துவசாஸ்திரிகள் கருத்து நிறைந்தியமவாக்குகளைக் குறிப்பிட்டுள்ளனர். தற்காலத்திய சில மேதாவிகள் ,சாரத்தையிழந்து சக்கையைச்சுமந்துநிற்கும் பன்னுடைபோன்று, அச்தசாஸ்திரங்களின் உட்கருத்தை ஊகிப்பதிற்போலும் சிரத்தையற்றவராகி மேம்போதப்பணிப்பண்டமயிய இந்த ஸ்தூலசரீரத்திற்கே "வெகுதூரம் தீண்டலுண்டு" என்று தமது ஸ்தூலக் கண்களால் மேட்டிப்பொருள்கொண்டனர். ஸ்தூலசரீரத்தின் தீண்டல் சுத்தஜலத்தோடு ஒழிவதை லோப்புபோட்டு சிஞனஞ் செய்தோர் உன்சறிவர். லெல்லாம் இந்த ஆராய்ச்சிக்காரரின் வாக்

கு இனிக்குமோ கைக்குமோ காமறியோம். ஆனல் நமது கண்பர் ஸ்ரீ "சங்கிருதியார்" சமாசபோதினியிற் கூறுவதுபோல், அஹிம்சை, பரோபகாரம், சார்தம், திருப்தி, உற்சாகம், தைரியம் என்பவை சிறந்த ஆரோக்கியத்தையும், அதிருஷ்டத்தையும், ஆயுளையும் அளித்து அமரத் தன்மையிற் கொண்டுவிடு மென்பதை காமறிவோம். இக்காரணத்தினலேயே அஹிம்சை முதலிய மனமலர்களால் எங்கும்நிறைந்த கடவுளை (அன்புகொண்டு) அர்ச்சித்து வழிபடுமாறு பெரியோருங்கூறுகின்றனர். இதனைப்பற்றிய சிறந்த தத்துவங்கள் சமீபகாலத்தில் தமிழ்காட்டில் இதோ வெளிவரவிருக்கின்றன. * * *

அன்னையின் பால்செழிக்க.

ஆலம்விழுதின் நுனியைக் கொணர்ந்து ஆவின்பாலிலரைத்து ஆறவேளை உட்கொண்டுவந்தால் அன்னையின்பால்அன்றுமுதல்செழிக்கும். குழந்தையும் புஷ்டியாகுமென்று தனித்துக்கூறவேண்டியதில்லை.

* * * *

சாமந்திபுஷ்பம் (ஜவந்தி என்றுங்கூறுவதுண்டு) மூளைக்கு நல்ல கூர்மையைத்தருமாம். தலையில் மிளகுதைலமிட்டு காலையில் குளிர்ந்தநீரிலே குளியாடிவருதலும் இந்த உத்தேசத்தை எளிதில் அடைவதற்கு உரிய வழியாம். வெண்டைக்காய், ஆப்பின்பழம் (கல்லசுவையானபழவர்க்கங்கள்) இவை உபயோகித்துவந்தால் இரத்தவிருத்தியும் ஆயுள்விருத்தியும் மூளைக்குப் பிரகாசமும் உண்டாகும். * * *

பூமிக்குள்ளே 3300, 000

பூமிக்குள்உள்ளசுரங்கங்களில் சுமார் 3300, 000 ஜனங்கள் வேலை செய்கின்றார்களாம். சுரங்கங்களினுள்ளே மனிதர்கள் வெகுதூரம்சென்று வேலை செய்வதனல் எதிர்பாராத—தடுக்கமுடியாத— ஆபத்துக்கள் தாராளமாக சம்பவித்துவருகின்றன. சமீபகாலத்தில் இந்தியாவிலே நிகழ்ந்த சுரங்கவிபத்தும், அதில் ஒருநூறுமனிதர்கள் ஒருங்கேஇறந்ததும் போதியஉதாரணங்களாகும். மனிதனது விலையேறப்பெற்றஉயிரை மனிதன்விலைவைக்காமல் சுரங்கத்தினுள்ளே இறங்குகின்றான். இத்தசம்பவங்கள் ஓர்புறமிருக்க, "மிகஆழமான சுரங்கத்தோண்டி பூதேவியின் மர்மஸ்தானங்களைப் பிளந்துபலவகைப் பொருள்களை வெளியேற்றுவதனல் பூதேவியின் சுகதாரவாழ்க்கை கடைபெறுதற்குப் பெருந்தடையாகுமென" ஓர்பிரதிருநிதத்துவசாஸ்திரபண்டிதர் அகஸ்தியனில் வெளியிட்டிருக்கும் 'தாவா' இன்னும் மறுமொழிபெறாதிருப்பதை இங்குநினைவுறுத்த விரும்பினேம்.

புஸ்தகவரவு.

அகஸ்தியர் தேவாரத்திரட்டு, சத்தியாவர்த்தனம் என்றபுத்தகங்களும், ஆயுர்வேதசம்பந்தமான அரியதண்டுப்பிரசுரங்களும், ருகுவேளாளர் விளக்கம் என்னும் பிரசுரங்களும் வரபெற்றோம்.

குரு லிங்க சங்கம்.

[முன்தொடர்ச்சி]

—[*]—

நல்ல குருக்களாலுண்டாகின்ற நன்மைகளும், தீயகுருக்களால் விளைகின்ற தீமைகளும்.

இனி, நல்ல குருக்களாலும் தீய குருக்களாலும் ஒரு மதத்திற்குஉண்டாகின்ற நன்மை தீமைகளைக் கூறுவோம். முன் ஒருகாலத்தில் ஒரு மனிதன் ஒரு குருடன் காட்டிய வழியே சென்றுகொண்டிருந்தான். எக்காரணத்தாலோ அவனுக்கு உதவியாக வேறொரு குருடனும் அங்கு வந்துசேர்ந்தான். இந்த இரண்டாவது குருடனால் முதற் குருடனுக்கு வந்த நன்மை யாது? இரு குருடர்களும் சேர்ந்து ஒரு குழியில் விழுந்ததுதான் பரமப்பிரயோஜனம்! இத்தருணத்தில்: மூன்றாவது குருடனொருவன் அங்கு தற்செயலாகத்தோன்றி அவ்விருவர்க்கும் வழிகாட்டத் தொடங்கினான். அப்பொழுது மூவருஞ்சேர்ந்து முன்னிலும் பன்மடங்கு ஆழமான குழியில் விழ நேர்ந்தது. இதுபோல் குருடர்களின் சகாயம் கூடிவருந்தோறும்;முதற் குருடனுக்குக் கஷ்டமும் ஆயாசமும் பெருகிவந்ததோடு, ஒவ்வொரு குருடரும் தோணிக்கு வந்து சேர்ந்தது முதல் அவனது சரீரத்தின் ஒவ்வொரு அங்கங்களுக்கும் ஆபத்து அதிகரித்தே வந்தது. இதுபோல, நல்ல— தேர்ச்சியான சமரச அறிவின்றிய ஆசாரியர்களின் உபதேச சகாயம்கிடைக்குந்தோறும் அதனைப் பெற்றுக் கொண்ட ஜனங்களின் உபத்திரவங்களும் பெருகிக்கொண்டே வருமென்று கூறவேண்டும். ஆனால், குழியில்:கிடந்து துன்புறுகின்ற குருடர்களின் தொகை ஒருகோடியாயினும், நல்ல கண்களையுடையவர் ஒருவரே அங்கு வந்து சேரினும் அவ் ஒருவரே யாவரையும் கரையேற்றி நல்ல வழிகாட்டப் போதுமான சக்தியுடையவராவர். அதுபோல, குறுகிய மதக்கொள்கையையுடைய ஒருகோடி குருக்கள் தோன்றினும் மனிதவர்க்கத்தைக் கைதூக்கிவிட்டு மேலான முறையில் அவர்கள் முன்னேற்றமடையும்படி செய்ய முடியாது. ஆனால் நல்ல கண்களையுடைய ஒரே மனிதனால் கோடிக்கணக்கான குருடர்களுக்கும் வழிகாட்ட இயல்வதுபோல, சமரசஞானம் நிறைந்த ஒரேகுருவினால் உலகத்திலுள்ள சகல மனிதருக்கும் ஞானமார்க்கத்தை விளக்க இயலும். அத்தகைய நிறமையுடையோர்க்கே 'உலககுரு' என்ற காரணப்பெயரும் அமைகின்றது. இனி, அவர் எத்தனாதிமதவகுப்புகளிலும் பிரத்தியேக அபிமானமற்றவராகி, ஆனால் ஒரு சரீரத்திலுள்ள ஆத்மாவானது கை, கால், கண், மூக்கு, காக்கு, செவி, ஹிருதயம் முதலிய எத்த அங்கங்களிலும் பிரத்தியேக அபிமானம்

கொள்ளாது– அவ்வபிமான எல்லையைக் கடந்து, அவை யாவும் தனது அபிமான ஆதாரவுகட்டு உட்பட்டன என்று அபேதமாய்க்கருதி வேண்டியனசெய்து வருவதுடோல, சகலஜாதி மதத்தினரையும் தனது ஆத்மாவாகக்கருதி ஆதரவோடு கவனித்து வருபவராக இருக்கவேண்டும். இந்த இலக்கணத்தை மீறி ஆத்மாவானது கண், காக்கு, மூக்கு, மெய், ஆண் குறி முதலிய ஏதேனும் ஒரு அங்கங்களின் ஆவலை நிறைவேற்றுவதில் பிரத்தியேக அபிமானங்கொண்டு அதற்கு வசமானால், சூழ்ந்த காரணத்தால் அவ்வங்கங்களுக்கும் ஆத்மாவுக்கும் முறையே பெருந்திங்குகள் உண்டாகும். உதாரணமாக:— ஆத்மாவானது 'கண்' என்னும் அங்கத்திற்கு வசப்பட்டால் அந்த சரீர சமுதாயத்திலுள்ள எல்லா அங்கங்களாலும் சம்பாதிக்கப்பட்ட பொருளே காக்ஷிக்கினிய பொருளிலேயே அது செலவிடும். காவிற்கு சுவாதீனமானால் இனிய சுவைகளுக்காகவே பொருள்களைச் செலவிடும். மூக்கினிடத்தில் அதிக ஆசை வைத்தால் சுகமணம் கமழும் வாசனைப் பொருள்கட்கே பணங்களைச் செலவிடும். மெய்யினிடத்து அதிக அன்பு செலுத்தினால் மெல்லிய படுக்கைகளுக்கே செலவிடத் தொடங்கும். ஆண்குறியின் விஷயத்தில் விருப்பங்கொண்டால் சரீரத்தின் எல்லா அங்கங்களாலும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கப்பட்ட எல்லாவித்தப்பொதுச் செல்வங்களையும் அதற்கே அள்ளிவிடும். ஆதலால், 'தூர' "உலக தூர" என்போர் உலக சம்பந்தமான யாதொரு சிறிய விஷயங்களிலும் ஜாதிமதங்களிலும் பிரத்தியேகக் கொள்கைகளற்றவராய், அதி வர்ணசாமியாய், [வர்ணம், ஆசிரமம், ஊர், பேர், தேசம், வேஷம், பாஷை முதலிய அபிமானங்களை உதறி மேலேசென்ற மனோபாவனையுடையவராய்,] அன்பு, பரோபகாரம், தெய்வபக்தி, ஜீவகாருண்யம், விடாமுயற்சி இவற்றில் சிறந்தவராய், உலகம் மேன்மையடைய வேண்டுமே என்னும் ஒரே உத்தேசம் கொண்டவராய் விளங்கவேண்டும்.

ஒருபள்ளிக்கூடத்திலுள்ள மாணக்கர் யாவரும் படித்து தம்மைப் போல் ஒரு உபாத்யாயராகத்தக்க நன்னிலைமைக்கு வரவேண்டுமென்றும், அவ்வாறு வரும்படி செய்யவேண்டும் என்றும் போராவலும் அக்கரையும் சக்தியும் உடையவரே இயற்கையில் அப்பள்ளிக்கூடத்தில் ஆசிரிய பதவியை அங்கீகரித்து அலங்கரிக்கத் தகுதியுடையவராவதுபோல, உலகத்திலுள்ள மனிதர் யாவரும் மதசம்பந்தமான அறிவுகள் நிறையப்பெற்று எல்லோரும் தம்மைப்போல் நன்னிலைமைக்கு வரவேண்டுமென்றும், அவ்வாறு வரும்படிக்கு செய்யவேண்டியதே தமது கடமை என்றும் அப்பேராவலும் அக்கரையும்சக்தியும் உடையவரே இயற்கையில் சிருஷ்டி நியாயத்திற்குச் சம்மதமான உலக குருவாவர்.

லிங்கம் என்பது யாது?

இனி, இரண்டாவது விஷயத்தை காடுவோம். இலிங்கம் என்னும் பதமானது 'எல்லா உலகங்களுக்கும் மூலகாரணன்' என்று பொருள்

படுகின்ற ஈசனை விளக்கும் ஒரு இடுகுறிப் பெயராகும். அந்த ஈசன் எங்கும் நிறைந்த பொருளாதலால், அவரது வியாபகத்தன்மைக்கு இடமாகி– அவரை வழிபடுவதற்கு இடங்கொடுக்கின்ற வஸ்துக்கள் யாவும் அவரது வடிவமே என்று விளக்கப்படுவதால் அவை யாவும் இலிங்கம் என்ற பெயரால் வழங்கத்தக்கனவாகும். ஆதலால் கடவுளின் பெருமையைப் பலவகையிலும் உணர்த்துகின்ற வடிவங்கள் யாவும் இலிங்க வடிவங்கள் என்று முடிகின்றது.

இந்த இலிங்க வடிவங்களை ஹிந்துமத சாஸ்திரங்கள் பின்வருமாறு வகுத்துக் கூறுகின்றன.

1. ஞானலிங்கம். (அதீதம்)
2. சதாசிவலிங்கம். (விசுவரூபம்)
3. ஆத்மலிங்கம். (அரூபம்)
4. பிண்டலிங்கம். (ரூபம்)
5. அண்டலிங்கம். (ரூபம்)
6. ஸ்தாவரலிங்கம். (ரூபம்)

இந்த அறுவகை லிங்கங்களுடையவும் பொருள்களை ஆராய்வோம்.

1. ஞானலிங்கம்:— இது உருவமாயும், அருவமாயும், உருவ அருவமாயும் குறிக்கத்தக்கது தான், என்றாலும் உண்மையிலே சரீரமன வாக்குகளில் தட்டாமல் நிற்கின்ற பரம்பொருளையே குறிப்பிடுவதால் இதை அதீதம் என்று சொல்லவேண்டும்.

2. சதாசிவலிங்கம்:— இது சுத்த அசுத்த ஆத்மாக்களையுள்ளடக்கிய சகல புவனங்களும் முக்கிய அவயவங்களாயும் உதவி அவயவங்களாயும் தாதுக்களாயும் கற்பிக்கப்படுகின்ற வடிவமாகும். இதுவும் அருவ உபாசனையைச் சார்ந்ததே.

3. ஆத்மலிங்கம்:— இது ஜீவாத்மாவில் அந்தரியாமியாகி (உள்ளீடாய்) விளங்குகின்ற பரமேசனைக் குறிப்பிடுவதால் ஆத்மலிங்கமாகும். இதுவும் அருவ உபாசனை என்று சொல்லவேண்டும்.

4. பிண்டலிங்கம்:— மனித சரீர வடிவமே பிண்டலிங்கமாதலால் இதனை உருவ உபாசனை என்று சொல்லவேண்டும்.

5. அண்டலிங்கம்:— இது பூமண்டலம் ஆகாய லிங்கம் (பூகோளம் ஆகாய கோளங்கள்) இரண்டும் சேர்ந்தது. இது ரூப உபாசனையைச் சார்ந்ததே.

6. ஸ்தாவரலிங்கம்:— இது சக்தியும், சிவமும்- சரீரமும், சரீரியும்- (ஆத்மாவும்) சேர்ந்த வடிவமாகும். இதை சரீரியாகிய ஆத்மா யாதொரு உருவமுமில்லாத பரிபூரண வஸ்து என்று உணர்வதே ஸ்தாவரலிங்க உணர்வாகும்.

1 முதல் 4 வரையுள்ள லிங்கங்களை வழிபடும் முறை.

ஞானலிங்கத்தை முற்கூறியபடி அறிவினால் வழிபடுவதோடு, அவ்வறிவும் கழுவி ஞானலிங்க அனுபூதி மாத்திரமாய் மீந்து நிற்பதே ஞானலிங்க வழிபாடாகும்.

சதாசிவத்தின் உருவத்தை மனத்தினால் தியானித்து, அந்தத் தியா

..

னத்தில் காண்பான், காணப்படும் பொருள், 'காசி' என்ற மூன்றையும் கடந்து அதீத நிலையில் வழிபடுவதே சதாசிவலிங்க வழிபாடாகும்.

யோகவித்தை முறையினால் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங்களையும் பூசித்து அவைகளைக் கடந்து "ஆயிரவிதழித்தாமரையின்கண் ஜீவாத்மக் காசி பெற்று, அங்கு பிரம்மத்தை உபாசித்தல் ஆத்ம லிங்க வழிபாடாகும்." [பிரம்மம் என்றால் எல்லாம் வல்ல அழியாப்பெருமையுடைய, கடவுள் என்ற பொருள்]

தெய்வ பக்தர்களை அல்லது சற்குரு மூர்த்திகளை தரிசித்து அவர்களையே ஈசனுக்கருகில் வழிபடுதல் பிண்டலிங்க ஆராதனையாகும். தனது சரீரத்தையே பரமேசனுக்கருகில் வழி படுதலும் இந்த பிண்டலிங்க ஆராதனையில் உட்பட்டதே!

5 அண்டலிங்க உபாசனையும், அதன் பெருமைகளும்.

பூமண்டலம் சக்தியிலை; (யோனியிலை) ஆகாய மண்டலம் புருஷலிங்கம். இவை இரண்டும் சேர்ந்தது அண்டலிங்கமென்று சொல்லப்படும். இந்த அண்டலிங்கத்திற்கு எட்டுத்திசைகளும் திருவாடை; மலைகள் உத்தியானங்கள் புஷ்பமாலை; நக்ஷத்திரங்கள் சுவரத்தின ஆபரணங்கள்; சமுத்திரம் திருமஞ்சனசாலை; மேகம் பொழிதல் திவ்வியாபிஷேகம்; மரம் செடிகொடிகள் பூத்து உதிர்க்கின்ற புஷ்பங்கள் அர்ச்சனைகள், வாயு வீசுதல் வெண்சாமரம் வீசுதல்; மேகங்களின் குமுரல், சடல்களின் ஓசை, வண்டுகளின் ரீங்காரம் இவை இனிய வாத்தியகோஷங்கள்; உலகினர் செய்யுஞ் செயல்கள்யாவும் அவ்வீசனது திருத்தொண்டு; உலகிலுள்ள பல கோடி ஜீவராசிகளுமுண்கின்ற உணவுகள் அவரது நைவேத்தியம்; உலகினர் சம்பாவித்தல், படித்தல், பாடுதல் முதலிய வாக்குகள்யாவும் அவரைத்துதித்தல்; எண்ணுகின்ற எண்ணங்கள் யாவும் அவரது தியானம்; காண்பதும் நினைப்பதும் உறங்குவதும் அவரது உருவமென்றும், அவரது திருவாராதனையென்றும் உணர்ந்து, தானும் அந்த அண்டத்தில் உட்பட்ட வனுதலால் தன்னையும் அதுவாகப்பாவித்து (தியானித்து), 'தான்' என்னும் உணர்வும் ஒழிந்து— தற்போதமிழந்து— எல்லாம் அவனுக்கருகில் நிற்கும் நிலை அண்டலிங்க ஆராதனைநிலை!

6 ஸ்தாவரலிங்கமும் அதன் மகிமையும்.

சக்தியும் சிவமும் சேர்ந்து (சரீரமும் சரீரியும்) ஜீவனுக்குக் காணப்படுவதால் அந்த சரீரி ஒருவடிவமுமில்லாத பரிபூரண வஸ்துவென்று அறியின்ற உருவமே ஸ்தாவரலிங்கமென்று முன்னர் தெரிவித்தோம். இப்பொழுது அதன் அற்புத மகிமைகளைத் தெரிவிப்போம்.

சாதாரண இலிங்கம் ஒரு பிண்டவடிவாக இருக்கின்றதெனினும், கால், கை, கண், மூக்கு, காது முதலிய அவயவங்களில்லாமலிருக்கின்

றது. ஈசன் சகலப் பிரபஞ்ச வடிவினனுயிருக்கின்றன். ஆயினும் அவர்க்குத் தனியே ஒரு உருவமில்லையென்ற வீளக்குவதில் இத்ஸ்தாவரலிங்கமென்பது ஒரு கருவியாகின்றது. (சாம் ஆலயங்களில் காண்கின்ற சிவலிங்கங்களுக்கே ஸ்தாவரலிங்கமென்று பெயர்)

சர்வ பரிபூரண வடிவமாகிய சச்சிதானந்த பரப்பிரம்மம் சொரூபத்தைக் குறித்து தேவாலயங்களிற் செய்யப்படுகின்ற "இலிங்கார்ச்சனை" யாகிய உருவஉபாசனையே ஸ்தாவரலிங்க ஆராதனை என்று சொல்லப்படும்.

இலிங்கமும் ஆலயமும்.

இனி, இலிங்கத்திற்கும் ஆலயத்திற்குமுள்ள சம்பந்தங்களைக் கூறுவோம்.

தேவாலயம் பொதுவே ஸ்தாவர லிங்கம் என்றும், கோபுரமும் விமானமும் ஸ்தூலலிங்கம் என்றும் பலிபீடம் பத்ர (மங்கள) லிங்கம் என்றும், துவஜம் (கொடிமரம்) ஊர்த்துவ (மேல்) லிங்கம் என்றும், கர்ப்பகிருகத்திலுள்ள லிங்கம் சூக்ஷுமலிங்கம் (பரமார்த்தலிங்கம்) என்றும் சொல்லப்படும். இனி, பாணலிங்கம், ரத்தினலிங்கம் முதலியன சல அசல லிங்கங்களாகும். வேதிகையில் (மேடையில்) மண்டலமிட்டுப் பூஜை செய்யப்படுகின்ற அனந்தன், விஜயன் முதலான 96 லிங்கங்களும் மண்டலலிங்கங்களாகும். தனது விருப்பத்திக்கேற்ப ஹிருதய கமலத்தில் அவ்வப்போது கற்பித்து வழி படப்பெறுகின்ற இலிங்கம் சலன லிங்கம் (அசையும் இலிங்கம்) என்று சொல்லத்தகும். ஒருவர் பூஜிக்கும் சமயங்களில் மாத்திரம் மண் முதலியவற்றால் உண்டாக்கப்படுகின்ற இலிங்கம் கணலிகலிங்கம். (அக்கணத்திற்குமட்டும் நிற்கின்ற இலிங்கமாம்) தனது பூஜைக்காக வைத்துக்கொள்ளுகின்ற பாணலிங்கங்கள் ஆத்மார்த்த இலிங்கமென்று சொல்லப்படுகின்றன .96லிங்கங்கள்- 96தத்துவங்களை விளக்கும்.

மேலும், ஈசனை மண்வடிவத்தில் பாவித்து வழிபடுதல் பார்த்திவலிங்கம். ஜலவடிவத்தில் பாவித்து வழிபடுதல் அப்புலிங்கம். அக்கினி வடிவத்தில் பாவித்து வழிபடுதல் ஜோதிலிங்கம். காற்று வடிவத்தில் பாவித்து வழிபடுதல் வாயுலிங்கம். ஆகாச சொரூபத்தில் பாவித்து வழிபடுதல் ஆகாசலிங்கம்.

இந்த பஞ்சபூதலிங்கங்களையும் நினைவூட்டுகின்ற புனித ஸ்தலங்கள் முறையே திருவாரூர், திருவானைக்காவல், திருவண்ணாமலை, திருக்காளஹஸ்தி, திருச்சிற்றம்பலம் (சிதம்பரம்) என்பனவாம்.

இலிங்க விசேஷங்கள்.

கல்லால் செய்யப்பெற்றது சிலாலிங்கம்; நீல ரத்தினத்தால் செய்யப்பட்டது இந்திரநீல இலிங்கம்; பளிங்கினால் செய்யப்பெற்றது ஸ்படிகலிங்கம்; செம்பினால் செய்யப்பெற்றது தாம்பரலிங்கம்; பொன்னால் செய்யப்பெற்றது ஹேமலிங்கம்; வெள்ளியினால் செய்யப்பெற்றது ரஜத

லிங்கம்; பாரத (ரச)த்தினும் செய்யப்பற்றது ரசலிங்கம்; மரத்தினுற் செய்யப்பெற்றது தாருலிங்கம்; சாணத்தினுற் செய்யப்பெற்றது கோமயலிங்கம்; மலைவடிவமாக விளங்குவது பர்வதலிங்கம். இவைகளன்றி பாரமார்த்திகலிங்கம், சுயம்புலிங்கம், தெய்விகலிங்கம், ரிஷிலிங்கம், மனிதலிங்கம் என்ற வேறுவகை லிங்கங்களும் இருக்கின்றன. இவற்றில் எந்த லிங்கம் எதனால் செய்யப்பெறுகின்றதோ அந்தப்பொருளின் பெயர் அதற்கு அமைக்கிருப்பதைக் காணலாம்.

இனி, பீடமும் சிவலிங்கவுமாய்க் காண்பது அவ்வியக்த லிங்கம்; (தனித்தனியே புலப்படாத கடவுளின் வடிவம்). கை கால் கண் முதலிய 25 வடிவங்களும், அறுபத்துநான்கு வடிவங்களும் வியக்த லிங்கங்களாகும். முகம், கழுத்து, தோள், தனம் இவை மட்டும் காணப்படுகின்ற வடிவம் வியக்த அவியக்த லிங்க வடிவம்.

அநாதி முதல் உருவம் வரையுள்ள கால்வகை ஆராதனை முறைகளும் முன்னரே தெரிவிக்கப்பட்டனவன்றே! அவை அவரவரின் பக்குவ பாகுபாடுகளுக்கேற்ப சிரேஷ்டமுள்ளனவாம். இங்கு ஆராவதாகக் கூறப்பட்டதும், தேவாலயங்களில் அமைந்துள்ளதுமாகிய விக்கிரகாராதனை— ஆலய— வழிபாடுதான் இவை யாவற்றினும் சிறந்தது. எனெனில், உலகத்தில் பெரும் பான்மையரும் சம்சாரத்தில் அகப்பட்டவர்களன்றே? அவர்களின் மனம் ஸ்திரமாயிருக்க வேண்டுமானால், ஆகியிலே தேவாலயத்தோடு கூடிய லிங்கங்களையே ஆராதனை செய்து பழகவேண்டும்.

தேவாலய வழிபாட்டின் ரகசியப் பொருளும் உபசாரங்களின் உட்கருத்தும்.

இனி, சமய ஹிந்துமத நூல்கள் ஆலயங்களைப் பொதுவாக மூன்று வகையில் வகுத்துள்ளன. அவை:—

1. அண்டாலயம். 2. பிண்டாலயம். 3. ஸ்தாவராலயம் என்று சொல்லப்படும்.

1. அண்டாலயமாவது:— பரமேசுவரன் சகல உலகங்களிலும் கலந்து நிற்கின்றார். இதனால் அவர்க்கு விசுவரூபன் (உலகம் யாவும் உருவமாகக்கொண்டோன்) என்ற பெயரும் வழங்குகின்றது. ஆகவே, அவரது வாசத்திற்குக் காரணமாகிய அகில உலகங்களும் அண்டாலயம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஈசனை இவ்வடிவத்தில் உபாசனை செய்வோனுக்கு— உலகத்தையே கடவுளாகக் கருதித் தொண்டுசெய்வோனுக்கு— விசுவரூபஉபாசகன் என்ற நமது ஹிந்துமத நூல்கள் பெயரிட்டு அழைக்கின்றன.

2. இனி, பிண்டாலயம் என்றால் என்ன? அண்டத்தைப்போல, சுத்த அசுத்த மாயையினாலுண்டானவைகளும், ஸ்தூல சூக்ஷும தத்துவங்களோடு கூடியனவும், ஈசனது பஞ்ச கிருத்தியங்களுக்கு அரங்கமே

டையாய், மூலாதார முதலிய அறுவகை சேஷ்டைஸ்தானங்களோடு அமைந்தாய், சகல தேவர்களும் ஆனந்தத்துடன் வாழ்கின்ற வீடாய், சாகூாத் பரமேசுரனே வழிபடுவதற்கு உரிய இடமாய் விளங்குகின்ற மனிதசரீரம் பிண்டாலயம் என்று சொல்லப்படும்.

இந்த ஆலயம் முன்னர் பிரஸ்தாபிக்கப்பட்ட சால்வகை உபாசனை (வழிபாடு) களுக்கும் உரியதாகும். இதிலமர்ந்துலிங்கும் இலிங்கம் ஆத்மாவாகும். அந்த இலிங்கத்தில் வழிபடப்பெறுகின்ற ஆத்மாவின் உள்ளே (அந்தரியாமியாகி) விளங்குபவர் பரமேசுவரன். அண்டத்திலுள்ள எல்லாவித ஸ்தலங்களும், பொருள்களும் பிண்டத்திலுமிருப்பதனால் அவ்வண்டத்தைப்போல் இப்பிண்டத்தையும் கருதவேண்டும். (பாவனை செய்யவேண்டும்). பிண்டாலயத்தில் (சரீர ஆலயத்தில்) உள்ள ஆத்ம லிங்கத்தில் தெய்வத்தை ஆராதிக்கின்றவர்கள் சூக்ஷ்ம விக்கிரக ஆராதனைக்காரராவர்.

3. ஸ்தாவராலயம் என்பது யாது?

மேலே தெரிவிக்கப்பட்ட இரண்டுவித ஆலய வழிபாடுகளுக்கும் முதற் சாதனமாயும் மேற்படி அண்ட பிண்ட ஆலய நியமங்களையனுசரித்தும் பூலோகத்தில் சடவுளின் வழிபாட்டைக்கருதி மூதன்முதலில் புறப்படுகின்ற சகலவிதமான மனிதர்களுக்கும் பக்தி ஞான சாயுஜ்யங்கள் சித்திக்கும்வண்ணம், வேதாகமங்களிற் கூறியநியமப்படி அமைக்கப்பட்டிருக்கின்ற ஆலயங்களுக்கே ஸ்தாவர ஆலயம் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

அண்டாலயம், பிண்டாலயம், ஸ்தாவராலயம் என்ற இம்மூன்றும் ஈசனது வியாபகம் நிறைந்த இடமாகும்.

சபையோர்களே! இங்கு ஆதியில் ஸ்தாவர ஆலயம் என்பது ஒரு மனித வடிவமாக அமைந்துள்ள நியம வழ்பாடுகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆலயத்திலுள்ள கர்ப்ப கிரகம் சிரசு; அதன் இடை வெளி முகம்; கர்ப்ப கிருகத்தின் நிலைப்படித் தூண்கள் கண்களாகும்; அந்த நிலையிலுள்ள நாசிகை நாசி; அர்த்த மண்டபத்திலுள்ள இரு பார்ச்வ துவாரங்கள் இரு செவிகள்; அர்த்த மண்டபம் கழுத்து; மகா மண்டபம் மார்பு (வக்ஷஸ்); மணிமண்டபமும் அதிலுள்ள மணிகளும் சேர்ந்தது நாபி வரிசை; (தொப்பூழ்) துவஜ ஸ்தம்பம் ஆண்குறி; விருஷபம் (சக்தி) பீடம்; பலிபீடம் குதம்; கோபுரம் பாதங்கள்; கர்ப்ப கிருகத்தைச் சூழ்ந்துள்ள மாளிகைமண்டபமே மாலை; பிரகாரவீதி விலாப்புறத்திற்கும் கைகளுக்கும் இடையிலுள்ள ஸ்தானம் (சக்கம்); மூன்றும் பிரகாரம் தொக்கு (தோல்); நான்காம் பிரகாரம் கைகள்; துவாரவாயில் இரண்டு கால்களின் மத்தியிலுள்ள இடைவெளி; கோபுரத்தின் பக்கங்கள், இரண்டு கால்களினுடையவும் படக்கள். பிண்டாலயம் என்பது பக்தர்களின் சரீரம் போலவே ஈசனுக்கு அமைத்துள்ளது என்பதை விளக்கவேண்டி இவ்வளவு தூரம்

விவரித்தோம்.

இனி, கோபுரம் விமானம் முதலிய வடிவங்களின் உயரத்தை ஆதாரமாக்கிக்கொண்டு வேறுசில கருத்துகளை விளக்கலாம். துவஜஸ்தம்பத்தை நமது சரீரத்தின் மூலதண்டம் என்றும் (மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரையில் மேல் நோக்கிச் செல்கின்ற முதுகந்தண்டு என்னும்) பிரம்மரந்திரம் என்றும், விமானத்தை ஸஹஸ்ரதளம் (ஆயிரஇதழ்த்தாமரை) என்றும் வழங்குமாகக் கூறுவதுண்டு. இதைப்பற்றி நிகம ஞான சிவாசாரியஸ்வாமி தெரிவிக்கின்ற பொருளைக் கவனிக்கவேண்டும். அவர் தெரிவிப்பதாவது :— கர்ப்ப கிருகம்—சிரஸ்; அர்த்த மண்டபம்—புயம்; மகாமண்டபம்—தோள்; நிர்த்த (நடன) மண்டபம்—முழந்தாள்; ஆஸ்தான மண்டபம்—கணுக்கால்; மகாகோபுரம்—பாதம்.

இதுபோலவே ஆலய தத்துவங்களை பாவித்து ஞான அர்த்தத்தில் அறிந்து வழிபடவேண்டும்.

ஆலய தரிசன ரகசியம்.

ஸ்தாவர ஆலயத்தில் மூலாதாரம், துவஜ மண்டபம்; சுவாதிட்டானம், நிருத்த மண்டபம்; மணிபூரகம் மணிமண்டபம்; அனுகதம் மகாமண்டபம்; விசுத்தி அர்த்த மண்டபம்; ஆக்ஞை இடைவெளி மண்டபம். ஒவ்வொரு ஆதாரங்களாகிய மண்டபங்களிலும் ஈசனது செல்வக் குழந்தைகளாகிய செய்வ வடிவங்களை முறையே பூஜித்துச் செல்லவேண்டும். பிறகு 'ஆயிரவிதழ்த்தாமரை' என்னும் விமான கமலத்தின் நடுவே சர்ப்பகிரகத்தினுள் விளங்குகின்ற சூக்ஷும லிங்கத்தை அபிஷேகம், அர்ச்சனை தூபம், தீபம், நைவேத்தியம் முதலிய உபசாரங்களால் பக்தி வணக்கத்தோடு தரிசனஞ் செய்யவேண்டும். இந்த வெளிப்படையான கடவுள் வழிபாட்டு முறையையே ஒருயோகி தனது சரீராலயத்தின்கண் நடத்தி வரும் முறையை ஹிரண்யமத நூல்கள் பின்வருமாறு வருணித்து, இந்த ஆலய வழிபாட்டின் உட்கருத்தைச் சிறப்பாக விளக்குகின்றன.

யோகியானவன் தனது சரீரத்தின் ஆறு ஆதாரங்களிலுமுள்ள செய்வ வடிவங்களை ஒவ்வொன்றாக தாரணை செய்து, அந்த நிலைகளைக் கடந்து அப்பாற் சென்று, ஆயிர இதழ்த்தாமரையின் கண் "சகல வஸ்துக்களும்கும் ஆதாரமாக விளங்குவோனும் பராகாத சொரூபியுமாகிய" ஞான லிங்கத்தை, யோக நிஷ்டையினுண்டாகின்ற சந்திராமுருதத்தால் அபிஷேகம் புரிந்து, பிராணயாமமாகிய தூபம் வழங்கி, தச வாதங்களாகிய வாத்திய கோஷங்கள் முழக்கி, பிந்து கலைகளால் நிவாரணனை செய்து, ஆத்மாவை அர்ப்பணஞ்செய்தலாகிய (தற்போதித்தலாகிய) நைவேத்தியம் சமர்ப்பித்து மகிழ்கின்றன.

கல்வியும் கைத்தொழிலும்.

[மூன்தொடர்ச்சி.]

—*0*—

மாணாக்கனின் கல்வி வாசனையைக் கூர்மைப்படுத்திப் பிரயோஜனப்படும்படி செய்ய வேண்டியவர் உபாத்தியாயர். வெண்ணத்தின் வேகம் போகின்ற பக்கம் தோணியை விட்டால் உத்தேசயாத்திரை ஸ்தலத்தைச் சீக்கிரம்— எளிதாக— அடையலாம். அதுபோல் குழந்தைகளின் வாசனைப்போக்குப்படி கல்வித்துறையில் செலுத்திவிட்டால் குழந்தைகளின் ஞானுபிவிருத்தி மிக சிலாக்கியமாயிருக்கும்.

ஒருமனிதனுக்கு கன்ருகப்பழகின விஷயங்கள் (ஜென்மாந்தரப் பழக்கங்கள்) மிகஎளிதாயும், சிறிதுபழக்கமுள்ள விஷயங்கள் சிறிது கஷ்டமாயும், மூற்றிலும் பழகாதவிஷயங்கள் மூற்றிலும்சிரமமாயும், சிலபிரயோஜனமற்றதாயுமிருக்கும். 18 வயதுள்ளஒரு வாலிபன் இப்பொழுது 17 பாஷைகளில் புலவனுகிப் பற்பல நூல்கள் எழுதியிருப்பதாக இன்றுகேள்விப் படுகின்ருேம். இச்சம்பவம் அவனுடைய முன்ஜென்மத்திய கற்பயிற்சியை வெளியிடுகின்றது, இங்கு தெரிவித்த நியாயங்களால் ஒருவனுக்குப் பழகியவிஷயங்கள் எளிதாயும் பழகாதவிஷயங்கள் கஷ்டமாயும் தோன்றும்என்று தெரிந்து கொள்ளலாம். தூங்குகின்றவனை உணர்த்திவிடுவதுபோல, ஒருமாணுக்கனது மனத்தில் உறங்கிக் கொண்டிருக்கின்றவாசனைகளைப்புலர்த்தி விடவேண்டியதுதான் பெற்ருர்களுடைவும் குருவினுடையவும் கடமை.!

இனி கல்வி கற்பிக்கவேண்டிய முறை என்ன? என்றகேள்வியை எடுத்துக்கொள்வோம். மாணுக்கர்களுக்கு ஒருபாஷையில் ஞானமுண்டாகும்வரை எல்லோருக்கும் சமமான கல்வியை போதிக்கலாம். ஆனல், அத்தவேலை முடிந்தவுடன்பற்பலகலைஞானங்களைப் போதிக்கவேண்டும்.

ஒரு ஜனசமுதாயத்திலுள்ள ஜனங்கள் அந்தஜனசமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றி வருவதற்காக என்னென்ன பொருள்கள் தேவையாயிருக்கின்றனவோ அந்த அந்தப்பொருள்களையும் வேலையையும்செய்யத் தக்கமுறையில் அந்தஜனசமுதாயத்திலுண்டாகின்ற வாலிபர்கள் தொழிற்கல்வி கற்கவேண்டும். இதற்காக அந்தஜனசமுதாயத்திலுள்ள எல்லாக்குழந்தைகளையும் வாசனை முறைப்படி ஒருகணக்கெடுத்து, பிறகு அவர்களின் கல்வியை திட்டப்படுத்தவேண்டும்.

தற்காலம் பாஷாஞானத்தைவளர்ப்பதே கல்வி என்ற பலர்நினைத்துக்காரியஞ்செய்கின்றனர். இது முழுத்தவறு. பாஷைஞானம்பது கல்வித்துறையை விளக்குவதற்கு ஒருவழி; கைகாட்டிமரம்!

பிரதானக் கல்வி

மனிதசரீரத்தைக் காப்பாற்றக்கூடிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதேபிரதானமான இலௌகிகக்கல்வி. அதை ஆராய்ந்தால் இன்று கல்வி முறையில் அனுஷ்டிக்கப் பட்டுவருகிற அபியாமை விளங்கும். தேவையான பொருள்களை எளிதாகக்கடையில் வாங்கலாம். அந்தசாமான்கள் எப்படிச்செய்யப்பட்டன? எங்கிருந்து எதற்காகவந்தன என்பதைப்பற்றி விசாரிப்பதில்லை. ஒருமாணுக்கன் உபயோகிக்கின்ற பொருள்களின் உற்பத்தியைப்பற்றி அவனிடம் கேட்டால் அவனுக்குத்தெரியாது. அத்தகவிபரம்தெரியாத உபாத்தியாயர்களின் தொகையும் சுறைந்ததல்ல. நம்கண்முன்னே வந்து விற்கின்ற பொருள்களைக்கூட நாம் கவனிப்பதில்லை. தற்காலம் ஒருவன் கல்விகற்றுப்பரீட்சையில்தேறி உத்தியோகசம்பாத்தியம்செய்து மனைவிமக்களைப் பெறுவதுடன் ஒரு மனிதவாழ்க்கையின் உத்தேசம்நின்றுவிடுகின்றது! இதுயுத்திக்குச்சிறிதும் பொருத்தமான லௌகிகக்கல்வி யல்ல. உயிரில்லாதகல்வி, வெகுமோசமான்கல்வி. எழுதவும்வாசிக்கவும் கூட்டவும் சுழிக்கவும் கணக்கெழுதவும் போதிக்கின்றதேயல்லாது உயர்ந்தஉத்தேசங்களை இக்கல்வி வார்த்துவிடுவதில்லை. மனிதவாழ்க்கையின்உத்தேசங்களை மேலானமுறையில் வார்த்துவிடுவதேதகுந்தகல்வியாகும். தற்காலக்கல்விமுறை பொதுநோக்கமான நன்மையை விரும்பிச்செய்யப்படாமல் ரூபாயிலேயேகண்ணுயிர்நிற்கின்றது. ரூபாயை சம்பாதிப்பதில்பிரார்த்தனை! அதில்சந்தோஷம், இதுதற்காலம் எங்கும் காணப்படுகின்றதகல்விக்காட்சி. இது மகுடாமேகுற்றவாளியாகிக் கொள்ளுகின்றபரிதாபநிலை. ஞானத்தைவிரியச்செய்யாத கல்விகல்வியேயல்ல. கல்வி அல்லதுவித்தைஎன்பது ஒருமனிதனுடைய எல்லாத்தேவைகளையும்,செல்வத்தையும் எதையும்கொடுக்கத்தக்கது.

வித்தை என்பது 'அறிவு'என்றுபொருள்படுகின்ற தாதுவிலிருந்துபிறந்ததாதலால் அது தன்பெயரைக்காரணப்பெயராக அடையும்படி செய்யவேண்டும்.

உலகஞான முமில்லாமல் கஷ்டப்பட்டுவாழ்ந்துகொண்டிருக்கின்ற தற்காலக்கல்வியை எதில் சேர்க்கின்றது? கல்விச்சாலையில்புகுவோர் புத்தகமூலமாகக் கொஞ்சம் கொஞ்சம் படித்துக்கொள்ளுகின்றனர். ஆனால், அனுபவபூர்வமாய் நிடமான, [எதேனும்ஒருதுறையில்]பூரணமான கல்வி கற்றவர்காணப்படல்லை.

ஒருவன் மூக்கைப்பற்றிக் கூறுகின்ற புஸ்தகங்களை படித்துப் பரீக்ஷையில்தேறுகிறான்! வேறொருவன் நாக்கைப்பற்றி மட்டும் படித்துத்தேறுகிறான். இனியுமொருவன் பல்லைப்பற்றிப்படித்தும் பட்டம் பெறுகிறான். சரீரதத்துவம்(ஆண்மக்கல்விஉட்பட)பூராவையும் படித்து வெளிவருவோர் அரிதாகிவிட்டது. அப்படியிருந்தும் சரீரத்தைப்பற்றிய பூரண அறிவுகிடைக்கும்? சரித்திரபாடம்சிறிது, பூகோளசாஸ்திரம் சிறிது, வானசாஸ்திரம் 10 பக்கம், பையன்ஸ் 15 பக்கம், ரசாயனசாஸ்

இரம் 13 பக்கம், சுகாதாரம் 9 பக்கம், கணிதம் 10 பக்கம், லாட்டின் பாஷையில் ஒருவருஷம். இத்தனாணம் எதில் பூர்த்தியாயிற்று? உலகக்கல்வியில்கூட ஒருநிறைத்தஞானம் உண்டாகாதகிலமிலேயே இக்கல்வி பூர்த்தியாகின்றது. வஸ்துக்கள் (பொருள்கள்) சொற்பம். தேவையோ அதிகம். உண்டாக்குவதற்கு சக்தியில்லை. தொழில் அறிவும் குறைவு. பற்பலபொருள்களின் விலையேற்றமே இதற்குப்போதியசாகூி.

இவற்றால் இக்கல்வி போதுமான லௌகிகஞானத்தை உண்டாக்கவில்லை என்பது நிர்மானமாயிற்று.

இத்தகைமையில் மனிதவர்க்கத்தின் வாழ்க்கையைப்பார்க்கிலும் மிருகவர்க்கத்தின் வாழ்க்கை ஒழுங்காக நடைபெற்றுவருகின்றதென்ன லாம். ஆடுமாடுகள் சில விசேஷநியமங்களே ஒரேமுறையில் அனுசரிக்கின்றன. தேவையானபொழுது மேய்கின்றன. பிறகு, நித்திரை. அவைகளுக்கு 'டிரஸ்' ஒன்றும் வேண்டாம்! தேவைமட்டும் அவைகளைப்போன்ற சுகமக்கும் உண்டு. ஆசைமிகுதியினால் சுகமது தேவைகள்வளர்த்துகொண்டேசெல்கின்றன, அவைகளுக்கு அத்தசங்கடமில்லை. தேவைகளைவளர்த்திக்கொண்டுபோகின்றசுகம், அத்தேவைகளை நிறைவேற்றக்கூடிய புதியபுதிய பொருள்களைசுகமது விவேகசக்தியினால் என்உண்டாக்கக்கூடாது? அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்யவேண்டும். அத்தஆராய்ச்சியை வலுப்படுத்தக் கூடிய விதத்தில் வித்தியாப்பியாசமுறையை மாற்றிவிடவேண்டும்.

ஒருராஜ்யத்தில் பலசிறுவர்களிருக்கிறார்கள்.. மார்க்கட்டுகளில் சராளமானபுஸ்தகங்களும், உடைகளும், ஆபரணங்களும், தின்பண்டங்களும், பொத்தான் கடியாரம் படங்கள்முதலிய பலகாகூிப்பொருள்களும் வருகின்றன. இச்சிறுவர்களின் கையில் ஆயிரம்ரூபாய் வீதம் கொடுத்தால் ஒருமணிநேரத்தில் வேசாக்காகச் செலவுசெய்வார்கள். இவர்கள் "செலவுசெய்தல்" என்றகலையில் நிறைத்தபட்டம் பெற்றவர்கள். வேஷாக்சாமான்களை விலைகொடுத்து வாங்கவும் அழிக்கவும் கற்றுக்கொண்டதோடு படிப்பு நின்றுவிட்டதுசெலவுபண்ணவேஷாக்அவசியம்சொல்லிருக்கிறது.

"தேவைகள் அதிகம்" என்பதை விளக்குவதற்காகவே இதை விவரித்தோம். தேவைக்குத்தக்கபடி பணமிருக்கமுடிகிறதா? பணம்குறைவு. இதனால் சிறுவர்களுக்கு வேண்டியபொருள்களை நாம் வாங்கிக்கொடுக்கக்கூடாது என்றகொள்கையைக் கொண்டவர்களல்லர். ஆனால், தேவையில்லாதபொருள்களையும் தேவைஎன்று நினைப்பதையேஇக்குறைபாடு "வேஷாக்சாமான்கள்" என்றபெயரிட்டோம். தேவையைநிறைவேற்றுமளவிருப்பதும் அவசியமானசங்கதி. குழந்தைப்பருவத்திலும் வாலிபப்பருவத்திலும் பழக்கப்படுகின்றகாரியங்களே வயதான பருவத்திலும் வழக்கமாகின்றது. இந்த முறையில் எவ்வளவுகாலம் படித்தாலும் நிச்சயஞானகாரிகஅறிவுண்டாகஇடமில்லை.

உலகத்தின் வாழ்க்கை முறையை நடத்திக்கொண்டுபோவதே இக்காலத்தில் கஷ்டமாகிவிட்டது. ஒருவன் இரவுபகல் அறுபதுகாழிகை கஷ்டப்பட்டாலும் குடும்பபாரத்தை நீடத்தசக்தியில்லை. .....என்ன்கொடுத்தாலும் பிரீதியும்வருவதில்லை. சிறுவீட்மல் வாழவிருப்பமில்லை. இத்தன்மையில் மனிதன் போராசைக்கே வேலைக்காரனுகின்றான். வாரிவாரிச்சம்பாதித்தாலும் திருப்திவராத வாழ்க்கைமுறையை என்னென்பது? இப்பொழுது குடும்பத்திற்குத்தக்கபடி சாத்தமான மனவிமக்களிருப்பதில்லை. அதனுல் புருஷன் பலஅநியாயவழியில் பிரவேசிக்கவேண்டியிருக்கிறது. முன்னேர் அப்படியல்ல, அவர்கள் அறிவைப்பெருக்கி ஆசையைக் குறைத்து ஆனந்தித்தார்கள். இக்காலத்தினரோ, அறிவைச்சுருக்கி ஆசையைப்பெருக்கி விசனத்திலாழ்கின்றனர். கணவன்எவ்வளவுகஷ்டப்பட்டாலும் மனைவிமுதலியோர் அதை கவனிப்பதமில்லை! அனுசரிப்பதமில்லை! காற்காலியிலிருந்தவண்ணமே தமதுவாழ்க்கைமுறைசென்றால் போதுமென்ற சமாதானத்தோடு இருக்கிறார்கள். இவையாவும் தற்காலக்கல்விமுறையினுல் விளைந்த சிறந்த பிரயோஜனங்கள் என்றுசொல்லவேண்டும்! இதையுமோப்பிலிருந்து வந்த புதிய, மேலைகரமான முறையல்லவா?

கல்வியைக் கற்குமுன், கற்பிக்குமுன் அதன்பிரயோஜனத்தையும் உத்தேசத்தையும் விவேகிகள் நிர்மானித்துக் கொள்ளவேண்டும். மனைவி மந்திரியைப் போன்றவளாயிருக்கவேண்டும் என்று வடமொழியில் ஒரு கல்லகவி கூறுகின்றார். ஒரு ராஜ்ய நிர்வாகத்திற்கு மந்திரி, எத்தனை சமர்த்த ஆலோசனைக் காரனும் சமயோசித புத்திசாதுரியமுடையவனுயிருக்கவேண்டுமோ, அதுபோலவே. ஒருகுடும்ப நிர்வாகத்திற்கு மனைவியும் சிறந்த ஆலோசனை சமயோசிதபுத்தி சாமர்த்தியம் இவை நிறைந்தவளாயிருக்கவேண்டும். அவ்விதமிருந்தால்தான் அவ்வப்பொழுதுள்ள காரியங்களை சோர்வையாக கடத்துவதற்கும், அனர்த்தமான காரியங்களைத் தடுப்பதற்கும், மேல்வரக்கூடிய காரியங்களை முடிப்பதற்குமான முன்னேற்பாடுகள் செய்துகொள்வதற்கு சாத்தியமாகும். இதன் அர்த்தத்தை கன்ருகச்சிந்திப்போர்க்கு ஒருமனைவின் பொறுப்பு, எவ்வளவு விசாலமாயும் கௌரவமாயுமிருக்கின்றதென்று தெரியவரும். அதத்தில் சரியான பழக்கம்பெறாத ஸ்திரீகள் இக்காலத்தில் பெரிதான ராஜ்யநிர்வாகத்திலே பங்குபோட்டுக்கொள்ளமுயலுகின்றனர். இதைத்தாம் விரிவான விபரக்கியானம் செய்யத் தேவையில்லை. குடும்ப வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் ஒற்றுமையே ஜீவாதாரமாகும். கல்வியுள்ள உமியை நீக்கினுல் அரிசி விளையுமோயாது. உமியும்தேவைதான். இதை ஸ்திரீகளும் புருஷர்களும் தெரிந்துகொள்ளவேண்டும். மனிதனுக்கு ஒரு துணைவி வேண்டும். ஸ்திரீகளுக்கும் உயிர்த்தோழனை கணவன் வேண்டும். இருவருக்கும் சற்புத்திரர்கள் உண்டாக வேண்டும். இரண்டு ஆத்மாக்களும் கல்ல நீலை அடைய

வேண்டும். இதைத் தெரிந்து கொண்டால் மோகூத்திற்கு இடையூறான மார்க்கங்களில் இருவரும் பிரவேசிக்க மாட்டார்கள். சிறு வயதிலேயே இருவர் சிறுமியர் உள்ளங்களில் கல்லெண்ணங்களோ ஊடவேண்டும். பழக்க வேண்டும். இப்பொழுது ஸ்திரீ புருஷ வாழ்க்கையில் காணப்படுகின்ற விபத்துகளுக்கெல்லாம் இந்த எற்பாட்டைப் புறக்கணித்ததே காரணமாகும். இருவருடைய ஹிருதயத் நிலும் இதன் கருத்து வினக்குமாஞல், ஸ்திரீ சுதந்தரம், புருஷ சுதந்தரம் என்ற சொல்லின் பொருளும்: இப்பொழுது நினைக்கின்ற பொருளினும் வேறான பொருளில் இருவரையும் கொண்டு சேர்க்கும்.

குடும்ப வாழ்க்கையின் சோக்கம் இல்லற இன்பத்தைத் துணையாகக் கொண்டு ஈசனது காருண்ணியத்திற்கு ஆளாக வேண்டும் என்பதே. இந்த ஆவல் இருவருக்கும் இருக்க வேண்டும். இந்தியக் கல்வியின் உள்ளே இந்தக் கருத்து நிறைந்தது. இப்பொழுது ஐரோப்பியக் கல்வி வந்து நிறைந்து கொண்டதால் இந்தியக் கல்வி இருந்த விடம் தெரியாமல் மறைந்து கொண்டது.

'சிறுகக் கட்டிப் பெருகவாழ்' என்றபடி முன்னோர்கள் சிறு குடிசையில் வாழ்ந்தும், இலை, சருகு, கிழங்கு, காய், கனி இவைகளைத் தின்றும் மேலான பதவியை அடைந்து கொண்டார்கள். இலெனசெக் கல்வி முறை இந்த நிலையிலிருக்கட்டும். தெய்வீகக் கல்வி முறை இதனிலும் மோசம். யூரோப் தேசத்தில் ஸ்திரீயின் அரையில் புருஷன் பிரவேசிக்க வேண்டுமாஞல் (விஸிடிங் கார்டு) கொடுத்தனுப்புவதுடன் அனுமதி பெற்றே உட்செல்ல வேண்டும். இது தான் அவர்களின் சாகரிகம். இந்த சாகரிகம் இப்பொழுது அதிகமாக வளர்ந்து உத்தியோகத்துறையையும் ஊடுபற்றத் தொடங்கி விட்டது. இயற்கை நியமப்படி, உண்மையான சோக்கத்துடன், பக்ஷபாதமின்றி யோகிக்குங்கால் ஸ்திரீகள் உத்தியோகம் வகித்து உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மைகளைப் பார்க்கினும் கோடிப்பங்கு மேலான நன்மை அவர்களின் இல்லற வாழ்க்கை முறையில் அடங்கிக் கிடக்கின்றது. குடும்பத்தின் நிர்வாகமும் குழந்தை வளர்ப்பும், பொருளாதார முறையில் செட்டும், சுடும்ப வைத்தியமும் ஆகிய இந்த இலாகாக்களை நிர்வாகம் செய்யத்தக்கவர்கள் ஸ்திரீகளே. புருஷர்கள் வெளியிலிருந்து பொருள்களைச் சம்பாதித்து வீட்டில் கொண்டு சேர்க்கின்றனர். நிர்வாகம் செய்வோர் ஸ்திரீகளே. இதனுல் தான் ஸ்திரீகளுக்கு சற்குண மமைந்திருக்க வேண்டுமென எல்லோரும் வற்புறுத்தப்படுகின்றது. ஸ்திரீகளுக்கு கல்ல குணமமையாவிட்டால் புருஷன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வருகின்ற, குடும்ப நிர்வாகத்திற்கு ஜீவாதாரமான டணத்தை ஸ்திரீகள் வருத்தம் தெரியாமல் செலவிட்டு விடுவார்கள். குணமில்லாத ஸ்திரீயைப் பார்க்கும் பொழுது புருஷனுக்கு பேய பிடிஷ்டமிருக்கத்தைப் பார்த்தது போல் தோன்றும். புருஷனை தை

வ், அவமதித்தல், ஒத்துழையாமை ; ஆகிய குணங்களே சில ஸ்திரீகள் இப் பொழுது விசேஷமாகக் கைப்பற்றி யிருப்பதாய் புருஷ லோகத்தில் பிரபலமான கூக்குரல் தோன்றியிருக்கிறது. ஸ்திரீகள் இந்த அனுஷ்டானத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்! ஸ்திரீகள் இந்த அனுஷ்டானத்தை மாற்றிக் கொண்டால் புருஷர்கள் இப்பொழுது வீட்டுக்குள்வரும்! பொழுது பயப்படுகின்ற; அளவிலும் சிறிது குறைத்துக் கொள்வார்கள் (சகோஷம்!)

இங்கு ஒரு பதிவிரதா ஸ்திரீயின்கதை நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு கிருகஸ்தனது வீட்டுக்கு ஒருசாது வந்து சேர்ந்தார். அவரை கிருகஸ்தன் ஞாபகத் தவறுதலாய் வரவேற்று விட்டான்! இதைக்கண்ட அவனுடைய மனைவி அடுப்படியிலிருந்து பல்லைக் கடித்தாள். புருஷன் தர்க்கிரமறிந்து உள்ளே போய் மனைவிக்குத் தலைவாரிமுடித்து பூச்சூட்டி வேண்டிய பணிவிடைகள் செய்து, வந்த சாதுவுக்கு முன் தன்னை கௌரவப்படுத்தினால் பெரும் புண்ணியமாகுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். மனைவி ஒருவாறு இசைந்தனள்; விருந்தாளியுடன் இல்லறத்தான் இலையில்உட்கார்ந்தான். முதல் முறை எல்லா உணவு பொருள்களும் கிரமமாக இலைக்கு வந்து சேர்ந்தன. இவர்கள் ஆகாரத்திற்காக உட்கார்ந்தவர்களாதலால், இலையில் வந்த சாமான்களே சீக்கிரம் காலுமாற் செய்தனர். புருஷன் இந்தக் குறியை ஜாடையாக மனைவிக்குக் கூறினான். பதிலில்லை; இலைக்கு உணவும் வந்து சேரவில்லை. சிறிது உரத்தகுரலில் (பாதி பயத்தோடு) மனைவியை விரைவில் அன்னம் எடுத்துவரும்படி கூறினான். அந்த பதிவிரதைக்கு இந்த வாக்கு சகிக்கவில்லை. "என்ன? இன்று விருந்தாளி வந்த பெருமையா உமக்கு இருக்கபயம் நீங்கிற்று?" என்று அதட்டினாள்! இந்த சத்தங் கேட்டவுடன் இல்லறத்தானிடம் கல்வார்த்தை கூறி சாது தன்படியே சென்றார். இந்தபதிவிரதையின் கதை எல்லாஸ்திரீகளுக்கும் தெரியாதாயினும், எப்படியோ அவர்கள் அறிந்து இந்தமாதிரி விஷயங்களை கடப்பில் கொண்டுவிட்டனர்! "மூதற் கோணல் முற்றும் கோணல்" என் பதுபோல் "கல்வியாகிய" வாழ்க்கையின் அஸ்திபாரம் நிலை தவறியதனால் வந்தபயன் இது. ஸ்திரீகளை குணத்தோடு ஆதரிக்கவேண்டிய முறையைப்புருஷர்களுக்கும், புருஷர்களுக்கு பக்திவிசுவாசத் தோடு அடங்கி ஒழுகவேண்டிய முறையை ஸ்திரீகளுக்கும் முக்கியமாகக் கற்பிக்கவேண்டும்.

'கல்லாமூக்கங்களை மனிதவாழ்க்கையைவிட்டு அப்புறப்படுத்த வேண்டும்' என்றஉத்தேசத்துடன் இக்காலத்தில் சிலர் இரவுபகலாய் எழுதிவருகின்ற காவல்களை ஸ்திரீகள் படிக்கக்கூடாது. ஸ்திரீபுருஷர்களின் மனோபாவனைகளை கனவாகச் செய்துவிடக்கூடிய காவல்களுக்கு இப்பொழுதிருக்கின்ற உச்சஸ்தானம் அதன்வருங்காலவீழ்ச்சிக்கு அறிகுறி. காவல்களைப் படிக்குங்குணம் மாறினால்தான் குடும்பதர்மமும், புருஷனை தெய்வமாகபாவிக்கும் முறையும் ஸ்திரீகளின் மனத்தில் பதியும். காவல்களைப்

படிக்கும்படியான வசதிகளைச் செய்து கொடுத்தபுருஷர்கள் இந்த வேலையை ஸ்திரீகள் எப்படியாவது நிறுத்தும்படி செய்து, நற்குணக்கேடுக்கு முகொடுக்க வேண்டும். ஸ்திரீகளின் கடமையைப்பற்றி வேதம் இவ்விதமே போதிக்கின்றது. இனிஸ்திரீகள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஒரு தம்பதிகள் தமது இல்லற வாழ்க்கையை மிக சௌக்கியமாகக் கடத்திவந்தார்கள். மனைவியினிடத்தில் கணவனுக்கு மிகுந்த விசுவாசமிருப்பது சகஜமாயினும் மனைவிக்கும் கணவனிடத்திலிருந்த உத்தம பக்தியைச் சிறப்பாகக் கூறவேண்டும். இவ்விருவரும் ஒருமனப்பட்டு இல்லறவாழ்க்கையை கடத்திவரும் பொழுது ஒருமஹான் தற்செயலாக அவர்களின்வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வழக்கம்போல் அந்தமனைவி, வந்தவருக்கும் தனதுகணவனுக்கும் வணக்க விசுவாசத்துடன் வேண்டிய மரியாதைகள் செய்து, இலைபோட்டு அன்னம் பறிமாறினள். அன்னத்தை இலையில் வைத்தவுடன் குறித்த மஹான், தமதுஇலையில் ஒருவருக்குக்கொடுத்து சேஷமான உணவு பறிமாறப்பட்டிருக்கிறதென்றும், தாம் அதை புழுக்கவிரும்பவில்லை யென்றும் கூறினார். இல்லறத்தான் தன் மனைவியினிடம் இதன் உண்மை நிகழ்ச்சியைக்கூறும்படி பன்முறை வற்புறுத்திக்கேட்க அவளும் தான் பொய் சொல்லியே அறியாதவளென்றும், இவ்வன்னம் பறிமாறுமுன் ஒருவருக்கும் தான் உணவு அளிக்கவில்லை யென்றும் மிகுந்த அடக்கத்துடன்— பணிந்து— கூறினள். மனைவியின் நற்குணம் கணவனுக்கு நன்றாய் தெரியுமாதலால் வந்தமஹானை வந்தனம் புரிந்து மனைவியும் தானும் யாதொரு குற்றமுஞ்செய்யவில்லையென்றும், அந்தமஹானைத்தவிர்த்து வேறு ஒருவர்க்குமே உணவுகொடுக்கவில்லை— என்றும் ஆதலால், தமதுவிருந்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டினர். மஹான், இதனைக்கேட்டு கணவனுக்கும் தனக்கும் பறிமாறுமுன் "இந்த உணவை சனுக்கு நைவேத்தியஞ்செய்தது உண்டா இல்லையா?— என்று கேட்டார். பொய்சொல்லியறியாத அந்த மனைவி, "ஆம்" என்றுகூறினள். அப்படியானால், "கணவனைத்தவிர்த்து வேறு தெய்வமிருப்பதாகக் கருதி, அதற்குமுதலில் நைவேத்தியஞ் செய்துசேஷமாக்கப்பட்ட உணவைத் தாம் உட்கொள்ள விரும்பவில்லை" என்றுகூறிச்சென்றார். அன்றுமுதல் அப்பெண் மணியும் "சூல்மகட்கழகு தொழுகனைத்தொழுதல்" என்ற மஹான்வாக்கைக் கடைப்பிடித்து, தனது கணவனைக் கடவுள் என்றுகருதி வழிபட்டு வந்தாள். இத்தகுணவதியின் வாழ்க்கை முறையை இக்காலத்திய ஸ்திரீகள் தெரிந்து கொள்ளவேண்டும்! தம் வீட்டை நாடிவருகின்ற கல்லோர்களுக்கு கல்லுணவளிக்க வேண்டும்.

பொருளில்லாதவர்களும் மனமுள்ளவர்களும்.

உலகத்தில் பொருளில்லாமலும் சுகமாய் ஜீவிப்பவர் அதிகமாய் உண்டு; இது மனத்தைப்பொருத்த விஷயம். இவ்விதமனத்தை

உண்டாக்குவதே கல்வியின் லக்ஷியம். இத்தக்கல்வியைப் பரவச் செய்வதற்குத்தான் மேல் தெரிவித்தபடி புஸ்தகங்களை உண்டாக்கவேண்டும். வாழ்ப்பாணத்தில் சிலபள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருப்பதாயும், ஸர், ராமநாதன் ஏற்படுத்தியிருப்பதாயும் அறிந்து சந்தோஷிக்கின்றோம். இந்திய ஸ்திரீகள் வேத மந்திரங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் குடும்ப வாழ்க்கையை யாவது, கணவனுக்குச் செய்யவேண்டிய கைங்கரியங்களை யாவது நிறைத்தவர்களல்லர். ஆனால், அவற்றையே மிகுந்த பக்தியுடன் நிறைவேற்றிக்கொண்டு தெய்விகக் கல்வியிலும் மேன்மைபெற்று வேதகானஞ் செய்தார்கள். அவர்கள் பிரம்மவாதினிகள் என்று அன்றும் இன்றும் புகழப்படுகின்றார்கள். ஜனகர் என்னும் அரசனது மஹாசபையில் ஞானவிஷயமான வாதங்கள் நடந்தபொழுது யாஞ்ஞவல்கியர் முதலிய முனிவர்களோடு சிறந்தவாதஞ்செய்த கார்க்கி, முதலிய ஸ்திரீரத்தினங்களின் ஞானமுறையை இக்காலத்திய ஸ்திரீகள் தெரிந்துகொண்டு, அவர்களைப் போன்று சரித்திரப்புகழைப் பெறவேண்டும். அத்தி புராணங்களில் ஸ்திரீகளில் கோதை, கோலாஷ, விசுவவாரை, ஜாபாலை, கபநிஷத், பிரம்மஜாயை, ஜுஹூ, திதி மைத்ரேயி இந்திராணி, இந்திரமாதா, ஸரமா, லோமசா, ஊர்வசி, லோபாமுத்திரை, (அகஸ்தியரின்மனைவி)யமி, காளி, சசுவதி, ஸ்ரீ, லாக்ஷா, ஸார்ப்பராஜ்ஞி, சித்தை, மேதா, தக்ஷிணை என்றவர்களின் பெயர்கள் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் உலகக்கல்வியிலும் குடும்ப நிர்வாகத்திலும் ஆன்மக்கல்வியிலும் நிறைந்திருந்தமையால் இவர்களின் பரிசுத்தவாழ்க்கையை இன்றும் நாம் நினைத்து மகிழ்கின்றோம்! இங்ஙு முற்காலத்திய ஸ்திரீகளின் கல்விமுறையை ஆராய்ந்துபாருங்கள்!

அத்தகைய ஸ்திரீகளைக்கால் புருஷனுக்கு அதைப்பார்க்கிலும் மிகுந்த அதிருஷ்டம் வேறுஎன்ன இருக்கின்றது? மற்றஎல்லா அதிருஷ்டங்களும் எளிதில்வரும், புருஷனது ஆயுளைவிருத்தி செய்யக்கூடிய சோமன்புகள், தெய்வப்பிரார்த்தனைகள் இவைகளையே பூர்வகாலத்திய ஸ்திரீகள் மிகுதியாக அனுஷ்டித்துவந்திருக்கிறார்கள்.

சோமன் வாய்ப்பட்ட சத்தியவானைத் தன்து கற்பின்வலிமையால் மீட்டுவந்த சாவித்திரியை நாம்இன்றும் மறப்பதில்லை. ரோயினி, தமயந்திமுதலிய புராணஸ்திரீகள் தமதுபாதிவிரத்தியமகிமையால் இந்திய சரித்திரத்தில் முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். 'அருந்ததி' என்றபேரைக் கேட்கும் பொழுதே நமக்குச் சிறந்தமதிப்புத் தோன்றுவதால், அருந்ததியைக்குணமற்ற ஸ்திரீகளின் வாழ்க்கை முக்காலத்திலும் கொண்டாடப்படுமென்று தெரிகின்றது. இந்த நற்குணவாசனை மலிந்துவாழ்ந்துவந்த ஸ்திரீகளின் சுபாவத்தை இன்று காணப்படும் மோசமைக்குக் கொண்டுவந்தவர்களும் புருஷர்கள்தான்! ஆகவே ஸ்திரீகளின் மாறுதலான செயல்களுக்குப் புருஷர்களே உத்தரவாதஞ் செய்யவேண்டியிருக்கின்றனர். ஸ்திரீகளை அந்தமுறையில் பழக்கிவைக்காதகுற்றம்

புருஷர்களோச்சார்ந்ததுடன், அவர்களை கன்னிலைமைக்குக் கொண்டுவர வேண்டியகடமையும் புருஷர்களின் மீதுசுமர்துமிற்கின்றது.

புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பொருத்தமில்லாத படிப்புத் தேவையில்லை. யூரோப் தேசத்திய ஸ்திரீகளின் வாழ்க்கை மிக அருவருப்பாயிருக்கின்றது. அதை இந்திய ஸ்திரீகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டாம்.

புனர்ஜன்மம்—

மறுபிறப்பு.

[முன்தொடர்ச்சி]

—[*]—

ஒரு மனிதன் மற்றொரர் மனிதனை கேசித்து அவனைடி எவ்வளவு காலம்வரை வாழ்ந்து வருகின்றானோ அவ்வளவு சாலம்வரை அவனும் நேயன் கப்பிடிப்பொழுது உடன் வருவான். அளவுக்கு மிஞ்சிய நேயம் உண்டாகும்பொழுது, நீனைக்கும்பொழுதே நேயனும் அங்கு வந்து சேருவதுண்டு. நினைக்கும்பொழுது கூட வரக்கூடியநிலையிலிருக்கின்ற அந்த நேயனை— சிறிது சிறிதாக மறந்து அவனைடி பழகுவதையும் குறைத்து அவனை அவட்சியம் செய்து, அவனைடி சப்பாஷனை புரியாமலிருந்துவந்தால், அவனது ஊட்பும், பழக்கமும், சல்லாபங்களும் சிறிதும் இல்லாமற் போவதோடி, அந்தநினைகிதனும் நம்மை மதிக்கமாட்டான். அவ்வாறு சிறிதுகாலம் சென்றும்பொழுது அந்த நினைகிதனைப்பற்றிய ஞாபகமே நமக்கு யில்லாமற் மறந்துபோகும்.

இவ்வாறு நீடித்தகாலஞ் சென்றபின் நேயனை வருந்தியழைத்தாலும் அவன் வரமாட்டான். ஆதலால், மானசிக சமுத்திரத்தில் மூழ்கிக்கிடக்கின்ற மறந்துபோன ஒவ்வொரு பொருள்களையும் 'ஸ்மரணை ஞானத்தோடி' பழக்கம் செய்துகொண்டே வரவேண்டும். பழக்கப்பட்ட பொருள்கள் 'ஓருவனுடைய அந்தரங்க நேயனைபோல்' சிறிதும் தயங்காமல் ஞாபகத்திற்கு வந்து சேரும். இவ்விதமான பழக்கம் விருத்தியாக முற்றும்பெறும் பொழுது ஓருவனின் எல்லா ஐன்மங்களையும் அறியக்கூடிய சக்தியுடையவனாவான். அதாவது, மிகுந்த கட்டுப்பாடி

பழகிக்கொண்டிருக்கிற மனிதன் நம்மை விட்டு சதாகாலமும் நீங்காதிருப்பதுபோல, நாம் ஸ்மரணை ஞானத்தினால் மிகுந்த நட்புப் பாராட்டிக் கொண்டுவருகின்ற எல்லா எண்ணங்களும் (ஜென்மாந்தர சம்பவங்களும்) நமக்கு எப்பொழுதும் ஞாபகத்தில் இருந்துகொண்டேயிருக்கும். இவ்விதம் எந்த மனிதனை நாம் மிகுந்த நட்புபாராட்டிப் பழகிவருகின்றோமோ அந்த மனிதன்மட்டும் நம்மிடத்தில் அடிக்கடி வருவதும், அவ்விதம் நட்புப் பாராட்டப்படாத மற்றமனிதர்கள் நம்மிடம் நெருங்காமல் விலகிப் போவதும் சகஜமாயிருப்பதுபோல, நாம் எந்தஎந்த எண்ணங்களை (ஜென்மாந்திரசம்பவங்களை) அதிகமாகப்பழகிவருகின்றோமோ—ஞாபகத்திற்குக் கொண்டுவந்து நேசிக்கின்றோமோ, அந்த அந்த எண்ணங்கள் மட்டும் நமக்கு அடிக்கடி ஞாபகத்திற்கு வருவதும், மற்ற எண்ணங்கள் மிக ஆழமான மானசிக சமுத்திரத்தின் அடித்தட்டிலே சென்று மறைந்து போவதும் சகஜமாயிருக்கின்றன.

இனி, இந்த 'ஸ்மரணை ஞானத்தைத்தான் திரிகால ஞானிகளான மகரிஷிகள் திவ்விய திருஷ்டி என்றும் ஞானக்கண் என்றும்' சொல்லுவார்கள். ஆனால், இந்த ஞானக்கண்ணை வளர்ப்படுத்தி முந்தைய ஜென்மங்களையறிய விருப்பமுடையவர்கள் இச்சணபர்யன்தம் எவரேனுமிருப்பாராகில், அவர் அதற்காகப் பழகிவரவேண்டிய முறையை நாம் இவ்விடத்தில் எடுத்துக் கூறுகின்றோம்.

ஒரு தங்க வியாபாரியானவன், அந்த வியாபாரத்தை முடித்து, இரவில் வீட்டுக்குப் போகும்பொழுது அவனது அன்றைய இருப்புகிட்டத்தை ஒருமுறை கண்ணோட்டம் செய்து செல்லுகின்றான். ஆனால், அவ்விதம் திட்டம்பார்த்த மொத்தத்தொகை மட்டுமே அவனுக்கு ஒருவாறு ஞாபகத்தில் தோன்றக்கூடுமேயன்றி, அந்த மொத்தத்தொகை எந்தஎந்த இனமாக இருக்கின்றதென்று அவனுக்கு ஞாபகத்திலிருக்கமாட்டாது. அதாவது மேற்படி மொத்தத்தொகையில் 100 ரூபாய் நோட்டு எவ்வளவு, 50 ரூபாய் நோட்டு எவ்வளவு, 10 ரூபாய் நோட்டு எவ்வளவு, 5 ரூபாய் நோட்டு எவ்வளவு, 2½ ரூபாய் நோட்டு எவ்வளவு, 1 ரூபாய் நோட்டு எவ்வளவு, ஒரு ரூபாய் நாணயம் எவ்வளவு, அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய், வீச ரூபாய், காலணா ரூபாய் நாணயங்கள் எவ்வளவு,

சில்லரைச் செப்பு (பைஸா) நாணயங்கள் எவ்வளவு என்ற வகையும், தனித்தனி விபரமும் அவனுக்குத்தெரிய வராது. அவை ஒவ்வொன்றும் விபரமாகத் தெரியவேண்டுமானால், அவன் திட்டம் பார்க்கும் பொழுதெல்லாம் ஒவ்வொன்றையும் இனவகையாய்ப் பிரித்து, தனித்தனியே எண்ணி பன்முறை ஞாபகத்தில் பதியும் படி செய்துகொண்டு பெட்டியில் வைக்கவேண்டும். இவ்விதம் தினந்தோறும் அவன் செய்து வருவானானால், எவ்வளவு காலஞ் சென்றபோதிலும் அவன் இந்த இருப்பு திட்டத்தில் சிறிதும் விடாமல் ஒப்பிப்பான். இதுபோலவே, ஸ்மரணைசக்தியை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பும் மனிதன், ஒவ்வொரு நாளும் நித்திரைக்குப் போகும்பொழுதுதான் அன்றன்று செய்த காரியங்களை ஒன்றுகூட விடாமல் பன்முறை எண்ணி, அவற்றின் மொத்தத்தொகையையும் இன விபரத்தையும் திட்டம் பார்த்து அவற்றை உறுதியாகத் தெரிந்துகொண்டு நித்திரையாகிய பெட்டிக்குள் வைத்து மூடவேண்டும். மறுநாள் நித்திரைக்குப் போகும் பொழுது முதல்நாளிரவில் தான் 'நித்திரை' என்ற பெட்டிக்குள் வைத்த பொருள்கள் சரியாக இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். அதாவது முதல் நாள் சம்பவங்களின் மொத்தத்தையும் இனவாரியாகவும் சரிபார்க்கவேண்டும். அவ்வாறு சரி பார்க்கும்பொழுது அவை ஒன்றுகூட விடாமல் ஞாபகத்திற்கு வந்துவிட்டால் ஸ்மரணைசக்தி முழுமையே விருத்தியடைந்து வருகின்றது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அப்பியாசத்தை எவ்வளவுக்கெவ்வளவு விருத்தி செய்து கொண்டுவருகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு ஞாபகசக்தி விருத்தியாகி ஜென்மாந்தர சம்பவங்களும் தோன்றலாகும். உதாரணமாக:— ஒன்றிரண்டு நாள் தொடங்கி, முன் இருபதாவது நாளில் நடந்த சம்பவங்களையும், அவ்வரிசை ஒன்றிரண்டு மாதங்களில் தொடங்கி முன் இருபதாவதுமாதத்தியசம்பவங்களையும் ஒன்றிரண்டு வருஷங்களில் தொடங்கி முன் இருபதாவது வருஷத்திய சம்பவங்களையும், எளிதில் அறியத்தக்கபலம் ஸ்மரணைசக்திக்கு உண்டாகும்பொழுது, இந்த ஜென்மத்திலிருந்து முன் இருபதாவது ஜென்மம்வரை நிகழ்ந்த சம்பவங்களும் ஞாபகத்திற்கு வரும். இதனில் நேற்றைய சம்பவங்களைப்போலவும், அதன் முதல் நாளைய சம்பவங்களைப் போலவும்தான் நேற்றைய ஜென்ம சம்பவங்க

ளும், அதற்கு முக்கிய சம்பவங்களுமாகும் என்று தெரிந்து கொள்ளவேண்டும். இதுகாறும் ஜென்மாந்தரத்தை யறிவதற்கும், ஸ்மரணசக்தியை விருத்தி செய்வதற்கும் கூறிய வழிகள் யாவும் சாதாரணமானவை.

இனி, ஜென்மாந்தரங்களை யறிவதற்கு இதனிலும் சிறந்த முறையொன்றிருக்கின்றது. அது, "தியானயோக சமாதிநிஷ்டை செய்து மனம் ஏகாக்கிரப்பட்டு மௌனநிலை" பெறுதலாம். அந்தநிலையில் ஜென்மாந்தரங்களெல்லாம் அறியலாகும். ஒரு மனிதனை மனனஞ்செய்துத்திய பழங்கதைகள் பல அற்புதங்கள் தோன்றும்.

மனதை ஏகாக்கிரப்படுத்துகின்ற முறை.

இந்த அற்புதமான சித்தியை எல்லோரும் அறிந்து கொண்டு இதனிலே தேர்ச்சி பெறுவதற்கான சித்திமுறைகளைத் தெரிவிப்போம்.

சமுத்திரத்தினிடத்து காற்றினால் சதாகாலமும் அலைகள் அடித்துக்கொண்டே இருப்பதுபோல, ஒரு மனிதனுடைய மனதில் ரஜோகுணம் தமோகுணம் என்ற காற்றினால் சதாகாலமும் பலவகை எண்ணங்களாகிய அலைகள் அடித்துக்கொண்டே இருக்கின்றன. இதை மானசிக ராஜயத்தினுள்ள (மனதின்) வியாபாரக் கடலென்றும் மனஸ்தத்துவவாதிகள் சொல்வார்கள். மனமானது இந்த வியாபாரங்களை மூன்று பட்டணங்களில் நடத்துகின்றது. அந்தப்பட்டணங்கள் "சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம்" என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. "சென்றுபோன விஷயங்களைத் தள்ளவேண்டும்" என்ற நியாயத்தைப் பின்பற்றியாதொன்றையும் நீண்டயோசிக்காதிருந்தால் "சென்ற காலம்" என்ற பட்டணத்தில் மனம் நடத்திவந்த வியாபாரம் நின்றுவிடும். இதனால், சென்றகாலம் என்ற பட்டணத்தின்றும் மனம் பகிஷ்கரிக்க(விலக்க)ப்பட்டதாயிற்று. எனவே, மனம் சென்றகாலமென்ற பட்டணத்தின்றும் நீங்கிவிட்டதால் 'வருங்காலம்' என்ற பட்டணத்திற் சென்று தனது வியாபாரத்தை விரும்பத்தோடு செய்ய ஆரம்பிக்கும். அந்த வியாபாரம் "இனி வரப்போகின்ற விஷயங்களின் நன்மை தீமைகளைப்பற்றி" சிந்திப்பதே. இந்த வியாபாரத்தையும் "வரக்கூடாதவை, வரமாட்டா" என்னும் நியாயத்தை மனதினிடம் போதித்து, தடுக்க வேண்டும். அவ்விதம் தடுத்தால் மனமானது "நிகழ்காலம்" என்னும் நகரத்தில் புகுந்து

தனது வர்த்தகத்தொழிலை நடத்தத் தொடங்கும். (அதாவது நிகழ்காலச் சப்பவங்களையே நினைக்கத்தொடங்கும்) அடிபோழுது மனதைப் பார்த்துப் பின்வருமாறு ஹிதோபதேசம் செய்ய வேண்டும்:—

மனமே! சென்றகாலம், வருங்காலம் என்ற பட்டணங்களிலே வியாபாரம் நடத்துவதால் யாதொரு பிரயோஜனமும் இல்லை என்றும், ஆனால் வீண் கஷ்டமும் கால நஷ்டமுமுண்டானதுதான் பயன் என்றும் நீ நியாயமாகத் தெரிந்துகொண்டு இப்பொழுது நிகழ்காலம் என்னும் பட்டணத்தில் உனது வியாபாரத்தை நடத்துவதற்குத் தொடங்கியிருக்கின்றாய். ஆனால், இந்த வியாபாரத்திலிருந்தும் உனக்குக் கிடைக்கக்கூடிய பயன் "மூன்று பட்டணங்களில் வியாபாரம் நடத்தி நீ அடைந்த பயன்தான்" என்று அப்பட்டணங்களில் நீ நடத்திய வியாபாரத்தினாலுண்டான கஷ்ட நஷ்ட அனுபவங்கள் என்ற இரண்டும் இரண்டு பக்கங்களிலிருந்து உனக்கு சாகஷி கூறுகின்றன. ஆதலால், நீ இந்த நிமிஷத்திலேயே இந்தப்பட்டணத்தை விட்டுநீங்கிவிடவேண்டும். இவ்விதம் மனத்திற்கு ஹிதோபதேசம்செய்து திருப்புவதால் மனம் மூன்று காலத்திலும் பிரவேகிப்பதற்கு இடமில்லாமற்போகும். மனதுக்கு அதன் விருப்பமாகிய "மூன்று பட்டணங்களிற் சென்றுநடத்தும் வியாபாரத்தொழிலை நடத்தவொட்டாது சுகம் தடைசெய்தால்" அது வெளியுலகத்திலே நடத்தும் தொழிலை விடுத்து, உள்உலகத்திலே தனதுவியாபாரத்தொழிலை நடத்தத்தொடங்கும். இதற்கு சொப்பனம் (கனவுநிலை) என்று பெயர். மாறிமாறிப் பல விஷயங்களை நினைத்தலாகிய தொழில் கனவில் இருப்பது போலவே, கனவினும் மாறிமாறிப் பலவிஷயங்களை நினைக்கும் தொழிலிருப்பதால் அதுவும் "கனவில் நடத்திய வியாபாரத்தைப் போல கஷ்ட நஷ்டத்திற்கே இடமாகும்" என்று மனதிற்குப் போதிக்குமபொழுது, அது கனவினையும் விட்டு உறக்கத்திற்கு (நித்திரைக்குச்) சென்றுவிடும். உறக்கம் என்பது, மனம் தனது போதத்தை இழந்து கனவு கனவுகளும் சப்பாதித்த வாசனைகளை மட்டும் கைப்பற்றிக்கொண்டு நித்திரையிலடித்துக் கிடத்தலாம். இது மனத்தின் சுகாக்கிரத்தனமையல்ல. இந்த மனதை சுகாக்கிரத்தன்மையில் கொண்டுவரவேண்டுமானால், அதன் நுட்பமான வியாபார முறைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு, அதை அந்த

வியாபாரங்களினின்றும் பிரித்து விடவேண்டியிருக்கின்றது. அது எவ்விதமென்றால், இப்பொழுது மனம் குதிரையை நினைப்பதாக வைத்துக்கொள்வோம்.

அவ்விதம் நினைக்கும் மனம் குதிரை வடிவத்தை யடைகின்றது. இது மனதின் சிருஷ்டித் தொழில். இந்தத் தொழிலைச் செய்யும்பொழுது மனதை 'பிரமன்' என்று சொல்லலாம். குதிரை வடிவம்பெற்ற மனஎண்ணம் எவ்வளவுநேரம்வரை அதே வடிவம் பெற்று நிலை நிற்கின்றதோ (அதாவது எவ்வளவுநேரம் குதிரையை நினைத்துக்கொண்டே யிருக்கின்றதோ) அவ்வளவு நேரம்வரை, அந்த எண்ண வடிவமான குதிரையைப் பாலனம் செய்துகொண்டிருக்கின்றது. அவ்வளவு நேரமும் மனதை விஷ்ணு என்று சொல்லலாம். மனம் குதிரை வடிவத்தைவிட்டு ஆனைவடிவத்தை நினைக்கும்பொழுது அது ஆனைவடிவத்தை யடைகின்றது. அப்பொழுது இந்த மனதைப் பிரமா என்றும், குதிரை வடிவத்தை மாறுதலேபோன செய்கைக்குக் கர்த்தாவான அதை ருத்திரனென்றும் சொல்லலாம். இவ்விதம் மனமானது எந்தஎந்த வேற்றுருவங்களைச் சிந்தித்துக்கொண்டே இருக்கின்றதோ அப்பொழுதெல்லாம் அது பிரம்மாவாயும், சிந்திக்கப்பட்ட உருவங்களை விட்டு நீங்காதிருக்கும்வரை அது விஷ்ணுவாயும், அவ்வவ்வுருவங்களை விட்டுநீங்கும்பொழுதெல்லாம் அது ருத்திரனுயும் தெரிகின்றது. இவ்விதம் பூலோகத்தில் எவ்வளவு எவ்வளவு வெவ்வேறான உருவங்களுள்ள பொருள்களிருக்கின்றனவோ, அவ்வாறான எல்லாப பொருள்களிடத்தும் இந்த சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் தொழில்களை மனம் நடத்திக்கொண்டே இருக்கின்றது. இதைத்தான் மனதின் சூக்ஷ்மமான (நுட்பமான) வியாபாரமுறை என்று சொல்லவேண்டும். இங்கு சொல்லப்பட்ட மூன்றுவிதத் தொழில்களினின்றும் மனதை நீக்குவதற்குத் தெரிந்துகொண்டால், மனதிற்கு ஏகாக்கிரத்தன்மை தானே சித்திக்கும்.

அதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு உதாரணம் கூறுகின்றோம். மனம் குதிரையை நினைக்கும்பொழுது குதிரை வடிவத்தை யடைகின்றது; காளையை நினைக்கும்பொழுது காளை வடிவத்தையடைகின்றது; யானையை நினைக்கும்பொழுது யானை வடிவத்தை அடைகின்றது. குதிரை வடிவத்தை நினைத்துக்கொண்டிருந்த மன எண்ணத்தில் காளையும் இல்லை; யானையும் இல்லை.

அவ்விதமே யானையை நினைக்கும்பொழுது காளையும் இல்லை; குதிரையுமில்லை. காளையை நினைக்கும்பொழுது, யானையுமில்லை; குதிரையுமில்லை. குதிரையினுடையவும், காளையினுடையவும், யானையினுடையவும் அறிவு உண்டாக வேண்டுமானால் குதிரையையும் காளையையும் யானையையும் தனித்தனியே நினைக்கவேண்டும். இவ்விதம் நினைக்கும்பொழுதுதான் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்ற முத்தொழில் தேவையாக வருகின்றது. முத்தொழிலின் தேவை ஏற்பட்டதன் காரணம் குதிரைக்கும் யானைக்கும் காளைக்கும் உள்ள உருவங்கள்— ஒன்றுக்கொன்று வெவ்வேறாக இருந்ததுதான். ஒன்றுக்கொன்று உருவ விஷயமாகவுள்ள பொருள்களை நினைத்தலாகிய தொழிலைச் சுருக்கிச் சொல்வதானால் "மாறி மாறி நினைத்தல்" என்ற ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம்.

இனி, இந்த "மாறிமாறிச் சிந்தித்தலாகிய தொழிலினின்றும்" மனதை திருப்பவேண்டும்.

குதிரையை நினைத்துக்கொண்டிருக்கின்ற மனமானது யானையை நினையாமலிருந்தால் அவ்விதம் நினையாமலிருக்கும்வரை- குதிரையையே நினைத்துக்கொண்டிருக்கும். குதிரையையே நினைத்துகொண்டிருக்கின்றமனமானது யானையை நினையாவிட்டல் குதிரையேயே நினைத்துக்கொண்டிருப்பது மாறிமாறி நினைப்பதாக மாட்டாது. மாறிமாறி நினையாவிட்டால் மனம் ஏகாக்கிரதையில் வந்துவிடும். இதுதான் ஏகாக்கிர சித்தத்தையடைகின்ற முறை. இந்த முறையை விட்டு, வேற்றுருவங்களை (வெவ்வேறு பொருள்களை) நினைத்தால் அதுவே மாறிமாறி நினைப்பதாகும். மாறிமாறி நினைத்துவந்தால் அப்பொழுது- அவ்விடத்தில்- மனம் முத்தொழிலைச் செய்யவேண்டியதாகும். மனம் முத்தொழிலைச் செய்ய நேரும்பொழுது முன்போல் அது, மூன்றுகாலங்கள் என்னும் மூன்று பட்டணங்களிற் பிரவேசித்து, ஒரு பெரிய சம்சாரிபோல் தனது வியாபாரத்தை வலுவாகச் செய்யவேண்டிய அவசியம்வரும். இது மனம் "ஓடுங்கிய நிலையினின்றும் வெளிவிவகார வேலைகளுக்கு வரும் முறையாகும். இவ்வாறு மனம் வெளியே வந்து செய்கின்ற நிலைமையைத்தான் கனவு, கனவு, என்று மொத்தமாகச் சொல்லுகின்றோம்.

இனி, மனம் "மாறிமாறி நினையாவிட்டால் அது, நனவு கனவு நிலையை" ஜெயித்ததாகும். உதாரணமாக:— மூன்று செ

ஏற்பட்ட குதிரையை மாத்திரம் நினைத்துக்கொண்டிருக்கின்ற ஒருவனுக்கு "குதிரையைத்தவிர்த்து மற்ற ஒருஜந்துக்களும் படுபடாத நிலை எனவு எனவு நிலையுள்ள உருக்க (சுஷுப்தி) நிலைத்துச்சமமாகும். ஆனல உருக்கநிலையோ வெனின் தோசமிழந்த நிலையாம். இங்கு "குதிரையையே நினைத்துக்கொண்டிருட்டபதாகிய ஏகபோதம்" இருப்பதால் இது உறக்கமுமல்ல. எனவே, இந்தநிலை எனவுமல்ல, எனவுமல்ல, உறக்கமுமல்ல என்று ஏற்படும்பொழுது, இந்த மனம் எந்த நிலைமையை யடைந்திருக்கின்றது? இது இப்பொழுது தூரியம் என்னும் எளாக்கிரநிலையைப் பெற்றிருக்கின்றது. இதுதான் ஹிரதயத்திலுள்ள யோகசஸ்திரங்களின் முடிவான எகாக்கிரசமாதி அப்பாய முறையாம்.

இனி, இதை விருத்திசெய்துகொண்டு வரும் முறையைக் கூறுவோம். இந்த எகாக்கிர நிலையையடைந்த நினவுக்கு இரண்டு சத்துருக்களுண்டு. இவ்விரண்டு சத்துருக்களும் இந்த நினவின் பக்கத்திலேயே நின்றுகொண்டு சதாகாலமும் இதை எடுத்து விழுங்கி விடவேண்டுமென்சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். சிறிது எமாந்துபோனல் இந்தநிலை அந்த சத்துருக்களுக்கு இரையாகிறும். அப்படியானல் இதுவரும் செய்துவந்த வேலை வீண்வேலையாகும். ஆதலால், இந்த சத்துருக்களோ யார் என்று உசசத்திலுள்ள பேராசிரியர்களைக்கொண்டு நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த சத்துருக்களையறிந்து விலக்காததால் தான் முற்றுணர்ந்த யோகியர்கூட இந்தசத்துருக்களால் எபாற்று மடைந்து கஷ்டப்படுகின்றனர். இந்த சத்துருக்கள் யாரென்றால், "ஒருவன் பெயர் நினைத்தல் (அதாவது சங்கற்பம்); மற்றொருவனது பெயர் மறத்தல் (விகற்பம்); நினைத்தலின்ய சங்கற்பம் எவ்விதம் சத்துருவாகும் என்பதை இனித்தெரிந்து கொள்ளவேண்டும். இப்பொழுது குதிரையைவிட்டு யானையை நினைப்பதாக வைத்துக்கொள்வோம். இதுவும் நினவுதான். ஆனல் இது குதிரை நினவை யழித்துவிடுகின்றது. அக்காரணத்தாலேயே ஒரு நினவு மற்றொரு நினவுக்கு சத்துருவாகின்றது. இனி மறதி (விகற்பம்) என்பது எவ்விதம் சத்துருவாகின்றதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கும் குதிரை திருஷ்டாந்தத்தையே எடுத்துக்கொள்வோம். இப்பொழுது குதிரையை மறந்து விட்டால் குதிரை நினவு இல்லாமற் போய்விடுகின்றது. குதிரை

நினைவு இல்லாமற் போவதற்கு மறதி சாதாரணமானதால், மறதி (குதி
ரையின்) நினைவுக்குச் சத்துருவாகி விடுகின்றது. இந்த சத்துருக்
களின் சிரசையும் சங்காரம் செய்வதற்கு ஒரு சரியான— கூர்மை
யான— கத்தி வேண்டும். ஆனால், அந்த ஆயுதத்தைச் சம்பாதிப்
பதற்கோ இந்த சத்துருக்களைத் தேடிப்பிடிப்பதனிலும் பன்மடங்கு சிரமசாத்தியமாயிருக்கின்றது. அந்த ஆயுதம் என்னவென்றால், "ஆலுக்கிரமண நியமம்—" என்பதே. அனுக்கிரமண நியமம் என்றால் என்ன? ஓரே நினைவைத் தொடர்ந்து தொடர்ந்து நினைத்துக்கொண்டு வரவேண்டும். வாளைத்தீட்டுந்தோறும் அதன் கூர்மை அதிகப்படுவதுபோல, ஓரே நினைவைத் தொடர்ந்து தொடர்ந்து— விடாமல்— நினைத்துக்கொண்டே வரும்பொழுது அதன் சக்தி அதிகப்படுகிறதோறும் பக்கத்திலுள்ள சத்துருக்கள் அதனை நெருங்க முடிவதில்லை. இனி, கூர்மையான ஆயுதம் ஒருவனிடம் இருந்தாலும் அதை எடுத்து உபயோகிக்கின்ற கைக்கு பலம் மிகுதியாக இருக்கவேண்டும். அப்படியானால் இங்கு 'பலமான கை' யாது என்று தெரிந்துகொள்ளவேண்டும். பலமான கை என்பது 'சிரத்தை' யாகும். சிரத்தை என்ற கை சிறிது பலக்குறைவுற்றால், அந்த கத்தி கீழே நழுவிப்போகும். ஆகலால் சிரத்தையே வெற்றிக்குக் காரணம் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

* நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

மனிதனுக்குரிய உணவைப்பற்றி ஆராயும்பொழுது அக்கினியில் பாகப்படுத்திய அன்னமே உரியதெனச் சரீர தத்துவ சாஸ்திர அனுபவம் வற்புறுத்துகின்றது. செடி கொடிகளிலும் ஜீவன்டுவிதமுண்டு. சில மரங்களுக்குப் பிராணிகளின் வாடையடித்தால் உடனே பிடித்துத்தின்னும். இந்தியாவைச் சார்ந்த திருவாங்கூர், சேலம், கொல்லிமலை முதலிய இடங்களிலும், அமெரிக்காவிலும் இம்மாதிரியான மாம்ச பக்ஷணிகளாகிய விருக்ஷங்களுண்டு. இவை, தம் பக்கத்தில் வருகின்ற பிராணிகளின் வாடையையறிந்து தமது மெல்லிய (விழுதுபோன்ற) அவயவங்களால் பற்றிக்கொண்டு, மரத்தின் அடிவயிற்றின் பாகத்தில் அந்தப் பிராணிகளை சேர்த்துணித்து முறையே அவற்றின் இரத்தத்தை உரிஞ்சி விடுகின்றன. அவற்றின் வேர்களில் பலவகை மிருக இனங்களின் என்புகள்

நிறைந்திருப்பதே இத்தகைய சம்பவத்தை நிரூபிப்பதற்குப் போதியசான்றும். இவ்வாபத்தைத் தடுப்பதற்காகத் தற்காலம் காட்டிலாகாவைச் சார்ந்த அதிகாரிகள் அம்மாதிரியான விருக்ஷங்களைச் சுற்றி— காற்புரமும்— முள் வேலிகட்டி மேடைகள் அமைத்து— பொதுஜனங்கள் அவற்றின் பக்கமே நெருங்காவண்ணம் பாதுகாக்கின்றனர். விருக்ஷ வர்க்கங்களிலும் மாம்ச ஆகாரிகள் இருக்கின்றன என்பதைப் பலரும் அறிக்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு சில தத்துவங்களைப் புகட்டுவதற்காக இந்த விஷயம் இங்கு குறிக்கப்பட்டது. அதாவது இந்த விருக்ஷங்கள் இயற்கையாகவே மாம்சபக்ஷணிகள் மனிதன் மாம்சம் சாப்பிட்டுப் பழகுகின்றான். அவன் இயற்கையிலே வற்புறுத்தப் பெறுதவுணவாகிய "பிறஜீவர்களின் சரீரங்களான மாம்சத்தை" செயற்கையுணவாகப் பழகிக்கொள்ளுகின்றான். இதனால் அவனுக்கு உண்டாகின்ற பிரயோஜனம் என்ன? மிருதியான ஆரோக்கியமா, அல்லது சரீரபலமா? இரண்டுமல்ல. ஆனால், மிருகங்களுக்கு உரியனவாகிய மாம்சவுணவுகளை இவன் (மனிதன்) உட்கொள்வதால் இவனது மனிதசுபாவம் போய் மிருகசுபாவம் உண்டாகின்றது; மேன்மேலும் மாம்சவுணவுகளை உட்கொள்வதால் அந்த மிருக சுபாவம் புஷ்டியடைந்து விருத்தியாகின்றது. இவ்விதம் செய்கின்ற மனிதனது செயல் எதனை யுணர்த்துகின்றது? இவன் மனிதனைப் பிறந்தும்— மனிதனுக்குக்கீழ்ப்பட்ட மிருகவர்க்கங்களுக்குரிய உணவை விருப்பத்தோடு உண்பதால் இவன் கீழான மிருக வர்க்கங்களில் செல்கின்றான், என இவனது மனஸ்தத்துவ சாஸ்திரம் ஒப்புக்கொள்ளுகின்றது. ஆதலால், சுத்தமான உணவை (உணவுபொருள்களை) த்தெரிந்து உட்கொண்டு 'நோயற்றவாழ்வு' என்னும் குறைவற்ற செல்வத்தைப் பூரணமாயனுபவிப்பதற்காக எல்லோரும் முயல்வேண்டும். எனெனின் சரீரம் நோயுற்றதனால் சித்தின்பமும் அனுபவிக்கமுடியாது; பேரின்பத்திலும் மனஞ் செல்லாது.

இனி, "சரீரத்திற்கு மச்சம் பிறபிராணிகளின் மாம்சம் இவற்றால் எதேனும் பிரயோஜனமுண்டா? சரீரத்தைப் போஷிப்பதற்குரிய சிரேஷ்டமுள்ள ஆகாரம் எது?" என்பதை கவனிக்கவேண்டும். ஹிந்துக்களில் சிலர் மதசம்பந்தமான நியமங்களை உத்தேசித்து மரக்கரி உணவை உண்பதாகவும், ஆனால் அவர்களுக்குப் போதுமான பல (சக்தி) இல்லை யென்றும், நிடமான புஜபலமிருக்க வேண்டுமானால் மச்சமாம்சம் சாப்பிட்டுத்தான் காரியசித்தி பெறவேண்டுமென்றும் சிலர்வாதஞ்செய்கின்றார்கள்.

இதைப்பற்றி யூரோப் முதலான தேசங்களிலுள்ள சாஸ்திர ஆராய்சிக்காரர்கள் போதுமான முயற்சியெடுத்து அனுபவமுறையாக நிரூபித்திருக்கிறார்கள். பிரஸல்ஸ் ஸர்வகலாசாலையில் "எண்டாடைகோ" என்ற ஸ்திரீ (பண்டிதை) சரீரபரிசோதனை செய்கின்றவள். அவள் மரக்கரி யுண்கின்ற சில சிறுவர்களின் சரீரங்களைப் பரிசோதிக்க விரும்பி, 10,000 குழந்தைகளுக்கு மரக்கரி உணவு கொடுத்தும், 10,000 குழந்தைகளுக்குச்

காய்கரி (முதலிய மரக்கரி) உணவு கொடுத்தும் வளர்த்து வந்தாள்.

மரக்கரியுணவை யுட்கொண்ட சிறுவர்களின் சரீரத்தில் ஊசிகுத்தி மருந்துசெலுத்துதல் (Inject) என்றமுறையில் பரீக்ஷை செய்து பார்த்த பொழுது, அவர்களின் தசை நார்கள் (மாம்சமுட்கொண்ட சிறுவர்களின் சரீரத்தைப்பார்க்கினும்) நன்றாயும் பலமாயுமிருந்தது. ... ...

மாம்சத்தில் 2 பாகம் தண்ணீர், 1 பாகம் சத்து. இதில் பிராணிகளின் மூத்திரசத்தும் அடங்கியிருக்கின்றது. இந்த மூத்திரசத்து சோணமாகாவிடில் விஷம். இதனால் நாடி நரம்புகளுக்கு தோஷமுண்டாவது சகஜம். காய்கரிகளில் 2 பாகம் போஷணசத்தும் (போஷணத்திரவியம்) 1 பாகம் தண்ணீர் சத்தும் அமைந்திருக்கின்றது.

அமெரிக்காவில் டாக்டர் ஹேக் என்னும் மேதாவி உணவுபொருள்களைப்பரிசோதிப்பதில் பிரக்கியாதிபெற்றவர். அவர் எல்லாவற்றையும் பரீட்சித்துப் பார்த்து இவ்வபிப்பிராயத்தையே வெளியிட்டார். வேறு டாக்டர்களும் இதை விசாரித்திருக்கிறார்கள். அபிப்பிராய பேதமில்லை. அமெரிக்காவில் கருத்தமனிதர்கள் உண்டு. 20 வருஷங்களுக்குள்ளே கான்ஸர் என்னும் ஓர்வகை வியாதிவந்து- மாம்ச பக்ஷணிகளிடம் மட்டும் விரைவில் வந்து பிரவியது. இவ்விதமே க்ஷயம் (இழைப்பிருமல்) முதலான வியாதிகளும் வருவது வழக்கம். மச்சமாம்சம் தின்பதை விடுத்தினால் போதும்; கான்ஸர் வியாதியும் வருவதில்லை. வேறுமருந்து பலியாது! இதன் ரகசியமென்ன? ஜெர்மன் டாக்டராகிய கூலேரும் இவ்வாறே அபிப்பிராயப்படுகின்றார். அந்த மேதாவிகளின் அபிப்பிராயங்கள் உலகில் பரவியதன் பயனாக ஐரோப்பாவில் அநேகர் சாகபக்ஷணிகளாக மாறிவிட்டனர். மனித சரீரத்திற்கே மாம்சவுணவு தேவையற்றதென முன்னர் குறிப்பிட்டோம். அந்த ஜீவாதாரமான தத்துவத்தையறிந்த மேதாவிகள் இடைவிடாதுஉலகில் பரவச செய்ய வேண்டும். மாம்சவுணவின் விசேஷ குற்குண வியாபக சக்தியினால் 50 வருஷத்திற்குள் உலகத்திலே புதிதான வியாதிகள் தாராளமாகத்தோன்றி மனித சரீரங்களில் போதுமான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டன!

நியூயார்க்கில் 1000, 10,000 மரணங்கள் அடுத்தடுத்து சம்பவித்தன. அதன்காரணம் யாது? "மிருகங்களுக்கு வியாதி உண்டாகி, அந்த மிருகங்களின் மாம்சங்களை மனிதர்கள் தின்று மாண்டார்கள் என்பதே.

மாம்சவுணவு சரீரத்தின் கருவிகளைச் சீக்கிரம் நாசஞ்செய்யும். இந்தியாவில்பழக்கத்தினாலும்ஆசாரச்சீர்திருத்தத்தினாலும்பலர்மாம்ச பக்ஷணிகளாகிவிட்டனர். மச்சமாம்சத்தை விடக்கெட்டது வேறில்லை. அவற்றால் குஷ்டரோகங்கூட உண்டாகும்.

இவற்றின் ஆக்ஷேபசமாதானங்களை முக்கியமாகஇங்கு கவனிக்கவேண்டும்.

பலதிரட்டு.

அசுவர்க்கு 29 கோடி

வடமேற்கு எல்லைப்புறத்திலும் வாவிரிஸ்தானத்திலுமுள்ள காட்டு ஜாதியாரை அடக்குவதற்காக இரண்டு வருஷகாலத்திற்குள் 29 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாம். இவர்களையே 'பூர்விகபஞ்சாப் வாவிகள் அசுவர்கள்' என்று பெயரிட்டழைத்தோடு, இவர்களின் உபத்திரவம் நீங்குவதற்காக; அசுவினிதேவர் (என்னும் அக்காலத்திய பிரபல வைத்தியர்களையும்) ஸ்கல்லோர்களையும் பிரார்த்தித்தனர்போலும்.

பார்ஸிவகுப்பினரின் தர்மகுணம்.

1921—ம்வருஷத்தில் பார்ஸிவகுப்பினர் இந்தியாவிலே 48,97,07079 ரூபாய் தர்மஞ்செய்திருக்கின்றனர் என்று கோனஸஞ்சாரி கூறுகின்றது. * * * * *

தேங்காய் வெண்ணெய்.

டாடாகம்பனிக்காரர் சில புதிய முறைகளைக்கையாண்டு தேங்காய் எண்ணெயிலிருந்தும் வெண்ணெய் எடுக்கின்றனராம். * * *

கடலில்.

60 அடிஆழம் முக்களிப்போர், பவிழம் முதலியவற்றைத் தாராளமாகக்காணலாம். அவை அதன்கீழ்செல்வதில்லை. * * *

490 பிரிவு.

சமத்துவபாவனை நிறைந்ததாகச் சொல்லிக்கொள்ளப்படுகின்ற கிரிஸ்தவமதத்தினரும் 490 பிரிவினையுடையவர்களாயிருக்கின்றார்களென்றால், சமத்துவமணம்கிறிது ஒதுங்கியே சென்றுவிட்டதெனக்கூறவேண்டுமோ? * * * *

சந்திரமண்டலத்தின் தோற்றம்.

சந்திரமண்டலத்தின் சில மலைகள் 5 மைல்உயரமாகவும் பள்ளத்தாக்குகள் 4 மைல் ஆழமுள்ளனவாகவும் இருக்கின்றனவாம். * * *

மிருக மனிதர்.

சுமத்ராதீவின் மத்தியபாகங்களில் வசிக்கும் வேடர்கள் கரமாம்சபக்ஷணிகள் என்பது பிரசித்தம். சிலவேளைகளில் உயிரோடிருக்கும் மக்களையும் அவர்கள் பிடித்து உண்டமகிழ்வார்களாம். * * *

வாழ்க்கைக் கடலின் அலை.

பசியும் தாகமும் பிராணவாயுவின் செயல். இன்பதுனபம் மனத்தின்செயல். ஜனனமும் மரணமும் சரீரத்தின்செயல். ஜீவிதம்- வாழ்க்கை என்னும் கடலில் இவை இடைவிடாது தோன்றிக்கொண்டிருக்கும் அலைகளாம். * * *

காரணம் ஒன்றே.

'ஸுமனஸ்' என்பது மனத்திற்கும் மலர்க்கும் பெயர். இவை இரண்டும் கடவுளுக்கு உரித்தானமையின் பெயர் ஒன்றாயிற்றுப்போலும்! அஹிம்ஸை முதலியமனமலர்க்கு மணமதிகமாம். * *

மரணத்தைத் தடுத்தல்:-

தேவத்துவ சித்தி.

[முன் தொடர்ச்சி]

அதாவது, ஒரு சிறு பேனுக்கத்தியினால் நம்முடைய வலக்கையின் ஒரு புறத்திலும், அவ்வாறே இடக்கையின் ஒரு புறத்திலும் சிறிது கிறிக் கொள்வோம். இப்பொழுது இரண்டு கையிலிருந்தும் இரத்தம் வருகின்றதல்லவா? இவ்வாறு இரத்தம் வருவதில் ஜீவஷ்டித சக்திக்கு சிறிதும் இஷ்டமில்லை என்று தோன்றுகின்றது. ஆதலே, இந்தக் கைகளை முன்போல் சுகப்படுத்துவதற்காக இப்பொழுது நாம் வெண்மையாகவும் கருமையாகவும் தனித்தனியே எடுத்து வைத்துள்ள அவரண்டு பொருள்களில் வெண்மையான பொருளிற் சிறிதுபாகத்தை வலக்கையிலும், கருமையான பொருளிற் சிறிதுபாகத்தை இடக்கையிலும் எடுத்து வைத்து இரண்டு முறிவுகளையும் வெள்ளாத் துணியினால் தனித்தனியே கட்டிவிடுவோம்.

இவ்விதம் கட்டிய கைகளை மறுநாட்காலையில் அவிழ்த்துப் பார்க்கும்பொழுது வெண்மையான பொருளை உபயோகித்துக் கட்டிய வலக்கை முறியானது சிறிது தோலோடு சேர்ந்தும், சருகு விழுந்தும் காணப்படும். கருமையான பொருளை உபயோகித்துக் கட்டப்பட்ட இடக்கை முறிவானது சிறிது வாயகன்றும், வெண்மையான அணுக்கள் நிறைந்தும் அதன்மேல் சிறு படலம் படர்ந்தது போலும் காணப்படும். அதற்றில் மீண்டும் மூன்றாவது முறிவாய்க்கு வெண்மையான பொருளையும், இடதுகை முறிவாய்க்குக் கருமையான பொருளையும் உபயோகித்துப்பார்போம்.

இனி, அவற்றை மறுநாள் அவிழ்த்துப் பார்க்கும்பொழுது முறையே வெண்மையான பொருளை உபயோகித்துக் கட்டப்பட்ட வலக்கை முறியானது சிறிது தூரியும், மூதல்நாளைப் பார்க்கிலும் அதிகமாகச் சருகும் விழுந்தும் காணப்படும்; கருமையான பொருளை உபயோகித்துக்கட்டிய இடக்கை முறியானது மூதல் நாளைப்பார்க்கிலும் அதிக வெண்மையான நிறத்தோடு வாயகன்றும், பக்கங்களில் சிறு சிறு அணுக்கள் ஒட்டியது போலும் (மூளைத்தது போலும்) காணப்படும். மீண்டும் முன்போல் வலக்கை முறிவுக்குச் வெண்மையான பொருளையும், இடக்கை முறிவுக்கு கருமையான பொருளையுமே உபயோகித்துப் பார்ப்போம். 4 நாள் சென்றபின் அவிழ்த்துப் பார்க்கும் பொழுது மிகவெண்மையான பொருளானது வலக்கையின் முறிவாயை ஆறச்செய்து அதருள்ள தோலை சீ

ரத்தின் நியமத்தோடு சேர்த்திருப்பதையும், மிக கருமையான பொருளானது இடக்கை முறிவாயை ஆற்றுமலிருத்தோடு புண்ணை வரவரு அதிகமாக்கி — முறிவாயை அகலும்படி செய்து — அதை வெண்மையான ஊருவத்தில் கொண்டுவிட்டு அதன் பக்கங்களையும் அழுகச் செய்து— அதைச்சுற்றிலும் சிறு சிறு கொப்புளம் போன்றவை அதிகமாகும்படிக்கும்செய்து- முடிவில் அந்தக்கையில் தெறியுங்கட்டிக் கையைத்தூக்கமுடியாத நிலையில் வேதனையையும் உண்டாக்கி யிருப்பதைக் காணலாம். இவ்வளவும் உப்பினிடத்தில் மறைத்துகிடக்க கரிய (அழுக்கு) அம்சம் செய்த வேலையாகும். இக்காரணத்தினாலேயே "அழுக்கானது புண்ணை அதிகமாக்குமென்று கருதி" புண்களின்மேல் காணப்படுகின்ற அழுக்கைசுத்தமாகக்கழுவிய பிறகுதான் வைத்தியர்கள் மருந்துபோடுகின்றனர். ஆதலால் உப்பிலுள்ள கருமையான பாகமானது சரீரத்தின் ஒருபாகத்திற்கு காசஞ் செய்வதென்று நமது அனுபவத்தால் நன்கு விளங்கி விட்டது. மேலும், இந்த உப்பின் கருமையானபாகம் கையின் முறிவை ஆற்றவிட்டாலும் அதேநிலைமையிலாவது வைத்துக்கொண்டிருந்தால் போதுமான தாயிருந்தது. ஆனால் அது அவ்விதஞ் செய்யவில்லை. சரீரத்தை முன்னிலும் பன்மடங்கு அதிகமான துன்பநிலைக்கு ஆளாக்கிவிட்டது ஆகவே: உப்பின் கருமையான அம்சம் சரீரத்தின் ஒருபாகத்திற்கு அழிவை யுண்டாக்கக்கூடிய பொருளென்றும், அவ்வாறே சரீரத்தின் ஒரு அங்கத்திற்குத் தீமை பண்டாக்கும் பொருள்: காலஅளவிலே சரீரத்தின் எல்லா அங்கங்களுக்கும் நீமையை விளைவித்து சரீரத்தையே நாசப்படுத்தக் கூடுமென்றும் படிப்போர்க்குத் தெளிவாகும். இவைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது சரீரத்திற்குத் தீமையையும் நன்மையையும் செய்யக் கூடிய இரண்டு பொருள்களையும் நாம்(கவனியாது) ஒன்றாகவே உபயோகித்து வந்திருப்பதாகத் தெளிவாகின்றது.

இனி, தோஷகுணத்தோடுகூடிய இந்த உப்பானது சுத்திசெய்யப்படாத நிலைமையில் சரீரத்திற் சென்றதுமுதல் அங்கு தொடர்ச்சியாக நடந்து வந்திருக்கும் செயல்களைக் கவனிப்போம். உணவு பொருள்களுடன் சேர்த்து சரீரத்தினுள்ளே அனுப்பப்பட்ட உப்பின் வெண்மையான பாகமானது ஜலத்தின் உருவத்திற்குச் சமமான உருவத்தை அடைகின்றது. அதன் கருமையான பாகம் ஜலத்தின் உருவத்தைப் பார்க்கினும் சிறிது திடத்த உருவத்தை யடைகின்றது. ஆகவே, இப்பொழுது நாம் உணவோடு சேர்த்து உட்கொள்ளுகின்ற சுத்திசெய்யாத உப்பின் வெண்மையான பாகமானது ஜலத்துடன் கலந்து நிறநீரோடும், மயிர்க்கால்களின் வழியே வெளியேறுகின்ற வெயர்வை நீரோடும் கலந்து வெளியே சென்று விடுகின்றது. அதாவது மயிர்க்காம்புகளின் துவாரம் எவ்வளவு நுட்பமாயிருந்த போதிலும் தண்ணீரானது எத்தனை சிறிய வழிவகை கொண்டு அவற்றின் மூலமாக வெளியே சென்று விடுகின்றதோ அதே

போலவே, உப்பின் வெண்மையான பாகமும் மிகச்சிறிய ஜலஅணு வடிவம்பெற்று அந்தஜலம் செல்லக் கூடிய துவாரத்தின் வழியேதானும் ஜலத்துடன் ஒன்றுசேர்ந்து சென்று விடுகின்றது. அதன் கருமையான பாகம்நிறநீரில் கலந்தும் வெயர்வை வழியாகச் சென்றும் போனது போக, மிகுதியுள்ள பாகமானது சரீரத்தில் பலவிதமான நோய்களை உற்பத்திசெய்ததோடு மயிர்க்காம்புகளில்தங்கி ரோமங்களையும் நரைக்கும்படி செய்து விடுகின்றது.

(உரோமங்கள் நரைக்கும் விதம்)

மேற்கூறிய உப்பினிடத்திலுள்ள கருமையான பொருளானது ஜலத்தைப்போல சிறியஉருவம் பெற்றுப் போக முடிவதில்லை. அதன்உருவம் ஜலஅணுக்களைப் பார்க்கிலும் பன்மடங்கு பெரிதாயிருப்பதால் ஒருசிறியவாயிற் படியில் பெரியதோர் யானைநுழைய முடியாததுபோல் மிகமிகச் சிறிதாகிய மயிர்க்காம்புகளின்வழியே அந்தப் பெரிதாகிய அழுக்கின் (கரிய) அணுக்கள் வெளிவர இயலாது மயிர்க்காம்புகளினடியே மன்றுடிக்கொண்டு கிடந்து விடுகின்றன. மயிர்க்காம்புகளில் இவ்விதம் கரிய அழுக்கின் அணுக்கள் வந்தடைந்து குழுக்கே படிந்துக் கிடக்கும்போழுது சரீரத்தின் சுத்தரத்தம் ரோமகூபங்களுக்கு தாராளமாக வந்துபோகவும் ரோமங்களுக்கு இரத்தப்பசையூட்டி வளர்த்தி அவற்றை மினுமினுப்பாக வைத்துக்கொள்ளவும் இடையூறுகின்றது. மூன் இடது கையின் மூழிவாயைக் கெடித்ததுபோல் இப்பொழுதும் ரோமங்களின் அழகைக் கெடித்து அவைகளுக்கு "முதுகையாகிய நரையைக்" கொண்டு விடுவதற்கே இந்தக்கரிய உருவங்கள் முயலுகின்றன. இங்ஙனபடிப்போர்க்கு மயிர்க்காம்புகளின் அடியிலே வந்து தங்கிக்கிடக்கின்ற கருமையான அழுக்குகள்தாம் மயிர்க்காம்புகளுக்கு இரத்தப்பசை சாதாரணமாக வந்து சேர முடியாமற் செய்துவிடுகின்றன என்றும், அந்த அழுக்குகளில் சதா காலமும் மயிர்க்காம்புகள் சம்பந்தித்துக் கொண்டேயிருப்பதால் ரத்தத்தின் ரச சாரத்தை அவை உரிந்து எடுத்துக்கொள்ள முடியவில்லையென்றும், அதனால் மயிர்காம்புகள் வெளுத்து (நரைத்து) ப்போகின்றன என்றும் தெரிந்திருக்கும்.

இனி, இந்த நரை 'உப்பின் அழுக்கினால் உண்டானது' என்று கூறுவது உண்மையாயின், உப்பை உட்கொள்ளுகின்ற உடன் காலங்களிலன்றே உரோமங்களின் நரை தோன்றியிருக்கவேண்டும்? அவ்விதமின்றி, 50 வருஷங்களுக்குப்பின் உண்டாகின்ற ரோமங்களின் நரைக்கும் இந்த உப்பின் அழுக்குக்கும் எப்படி சம்பந்தமிருப்பதாகக்கூறலாம்? என்று சிலர் கேட்க இடமுண்டு. அவ்விதம் உப்பைத்தின்ற உடன் காலத்திலேயே ரோமங்கள் நரைக்கும்படி சரீர நியமங்கள் இடங்கொடுப்பதில்லை. சாதாரணமாக 50 வருஷஞ்செல்லும் பொழுது நரை தாராளமாகத்தோன்றுவதற்கு இடமுண்டு. உதாரணமாக:- ஒரு கட்டிடத்திலு

ள்ள சுவரை ராமன் முதல் கிருஷ்ணன் ஈறுசவுள்ள நூறு வேலைக்காரர்களும் இடித்துப் பார்த்துக் கடைசியில் நூறுவதாக இடித்த அனந்தகிருஷ்ணன் என்பவன் இடித்ததாகவும், அப்பொழுது சுவர் விழுந்து விட்டதாகவும் வைத்துக்கொள்வோம். ஆனால் இந்த அனந்தகிருஷ்ணன்தான் அந்த சுவரை இடித்து வீழ்த்தினன் என்று சொல்ல முடியாது. அந்த அனந்தகிருஷ்ணனே ஆதியில் இடித்திருந்தால் சுவர் வீழ்வதற்கு நியாயமில்லை. எவ்வாறெனில் இந்த சுவரினிடத்தில் நூறு சக்தி (நூறுபங்கு பலம்) அடங்கியிருந்ததாக வைத்துக்கொள்வோம். இங்கு ராமன் முதலிய ஒவ்வொருவரும் இடிக்கும்பொழுது சுவரினிடத்துள்ள 100 சக்திகளில் முறையே ஒவ்வொன்றாகக் குறைந்து வந்திருப்பதையும் கடைசியில் ஒரு சக்தி மீந்திருக்குங்கால் சுவரை அனந்தகிருஷ்ணன் இடிக்க, அந்த நூறுவது சக்தியும் குன்றி சுவர் தகர்ந்துவீழ்ந்ததாகவும் சொல்லவேண்டும். இந்த உண்மையை அறிய விரும்பினால் அதே அனந்தகிருஷ்ணனைக் கொண்டு மற்றொரு சுவரை ஒரு இடியினால் வீழ்த்தும்படி செய்து பார்க்கலாம். அந்த ஒரு இடிகொண்டு சுவர் விழாது! அதுபோல் சரீர சமூகத்திலடங்கிய அங்கங்களில் ஒன்றாகிய ரோமங்களுக்கு சரீர நியமமானது "அளக்கப்பட்ட ஒரு சக்தியை" கொடுத்திருக்கின்றது. அந்த சக்திக்கு 50 பங்கு பலமிருப்பதாக வைத்துக்கொள்வோம். சூரித்தப் பிழுடைய கரிய உருவமானது எக்காலத்தில் மயிர்க்காலை வந்தடைந்ததோ அக்காலம் முதலே இந்த மயிர்க்கால்களுக்கும் அழுக்குக்கும் பெரியயுத்தம் சுடர்ந்துவந்தே இருக்கின்றது, என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். அழுக்குக்குத் துணையழைத்து சகாயமாகி வரவர பலமும் அதிகரித்து அது ரோமத்தைச் சுற்றைபோட்டு ரோமத்தின் ஒவ்வொரு பலத்தையும் முறையே பிடித்தடக்கி வந்திருக்கின்றதென்றும், கடையாக ஒரு பலம் மீந்திருக்கும்பொழுது அழுக்கானது அந்த பலத்தையும் ஜயித்துவிட்ட பிறகுதான் "ரோமம் வெளுத்து— வெளியில் தோன்றும்படியான நிலை வந்துவிட்டது" என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் 4 பங்கு பலம் மயிர்க்காம்புகளுக்குக் குறைந்து விட்டதாக முதலில் வெளிப்படையாய்த் தோன்றவில்லையே என்று வேறொரு கேள்வி எழும். அதற்கும் சுவர் திருஷ்டாந்தத்தைக் கொண்டே விடையளிப்போம். 99 இடி இடித்தபொழுதும் சுவர் நிற்பதுபோலவே காணப்பட்டதல்லவா? அதுபோல் 49 பங்கு பலம் உட்பாகத்திற்குன்றியும் ரோமம் நரைத்ததாக வெளியில் தோன்றுமலிருந்தில் ஆச்சரியமொன்றுமில்லை!

இனி இந்த திருஷ்டாந்தத்தைக் கொண்டு பார்க்கும் பொழுதுசாதாரணமாக 10 வருஷம் அல்லது 4 வருஷம் அல்லது ஒரு வருஷத்தில் இறந்து போகக் கூடிய மனிதர்களும் 50 வருஷங்களில் இறந்து போகக் கூடிய மனிதர்களும் வெளிப்பார்வைக்கு ஒன்றுபோலே காணப்படுவார்களே

ன்ற ஒரு அறிவும் மனிதக் கிடைக்கின்றது. ஆனால் அப்பொழுது சூக்ஷுமமான நியம அளவு கருவியினால் அந்த ஆயுள்பலத்தை அளந்து பார்க்கும்பொழுது அதன் அளவிடப்பட்ட நியமமும் —மரணத்தின் காலமும் — மனிதக்கு நன்கு விளங்கும்.

மேலே விளக்கப்பட்ட நியாயங்களால் உப்பினிடத்துள்ள அழுக்கானது சரீரத்திற்குத்தீங்கு செய்வதாய் தெளிவாயிற்று. ஆனால் இவ்வளவு தோஷமுள்ள உப்பை எவ்வளவோ பிரயாசமெடுத்துக்கொண்டு சுத்திசெய்து உபயோகிப்பதைப்பார்க்கிறோம் 'அந்தத்தொல்லைக்குச் சிறிதும்இடமின்றி, உப்பை உட்கொள்ளும் வேலையையே நிறுத்திவிடுவோமே' என்று சிலர் நினைக்கலாம். அவ்விதம் உப்பின் கண்ணுள்ள அழுக்கை நீக்குவதற்காக எற்படும் சிரமத்திற்குப் பயந்து உப்பையே விடுவதென்றால் "சரீரம் கிரகித்து நிற்பதற்காக உப்பைப்போல் இன்றியமையாததாகின்ற மற்றும் பல பொருள்களிருப்பதாகத் தெரியும் பொழுது —அவற்றிலும் உப்பிலுள்ள அழுக்குகளைக்காட்டிலும் அழுக்கிருப்பதாகவும் அவை சரீரத்திற்குக் குற்றஞ்செய்வன என்றும் தெரியும்பொழுது,— அவற்றையும் தள்ளவேண்டியதாக வருமே! இப்படியே தள்ளிக்கொண்டு போவதானால், அத்தகைய நியமங்களால் —பொருள்களால்— நிலைநிற்கப்பட்ட இந்த சரீரமும் பழுதுபடின்றி அழியவேண்டிய நிலைக்குவருமன்றோ? அதற்கென்னசெய்யலாம்!!

ஆதலால், உப்பிலுள்ள அழுக்குகளை நீக்கி, முன்சொன்ன நிலைமுறைப்படி சுத்தம் செய்து சரீரத்தின் தேவைக்கு ஏற்ப அளித்துவரவேண்டியதுதான் நமது முக்கியமான கடமை.

இனி, இவ்விதம் சுத்திசெய்த உப்பை உட்கொண்டாலும் அதுவும் சரீரத்தில தக்காறு முற்றிலும் ஜலத்தோடு கலந்து வெளியே சென்றுவிடும் இதற்கு காரணம் என்ன? என்பதை ஆராய்வோம். கல்கம் சேராத்தக் காய்ச்சப்பட்ட தைலத்தை ஒரு பன்னுடையில் பொழிந்தால் அந்தத் கல்கம் பூராவும் பன்னுடையின் மேல்பாகத்திலும் தைலம் அதன் அடியிலும் வந்துவிடும். ஆனால் கல்கம் சேராத தனித்தைலத்தை மாத்திரம் பன்னுடையில் விட்டால் தைலம் பன்னுடையின்மேல் சிறிதும் தங்காமல் கீழே வழிந்துவிடும். அதுபோல, சுத்தஞ்செய்யாத அழுக்குப்பை உட்கொண்டால் உப்பின் அழுக்குப்பாகம் சரீரத்தின் ரோமகூபத்துவாரங்களில் தங்கி வெண்மையான பாகம் முழுதும் வெளியே (தண்ணீரோடு) சென்றுவிடும். சுத்தஞ்செய்த உப்பை உட்கொன்னின் உப்பின் வெண்மையான பாகம் முழுதும் நிரவுபம் பெற்று வெளியே வந்துவிடும். ஆகவே, உப்பை இவ்விதம் சுத்தி செய்தலுப்புவதாலும் உப்பின் தேவை முடிந்தபாடில்லை என்று நிர்மாணமாயிற்று. இனி அடிக்கடி உப்பையனுப்பிக் கொண்டிருக்கும் வேலையில்லாமல் அதை ஒரு முறையாகப்பூர்த்தி செய்வதற்கு வழியுண்டா என்பதை கவனிப்போம்.

ஒரு சரீரத்திற்கு 10 ராத்தல் சுத்திசெய்த உப்புச் செல்லும்படியான கோசம் (பை) அமைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். இத்தப் பத்துராத்தல் உப்பையும் ஒருவன் ஒரேகாலத்தில் உட்கொள்ளமுடியாது. அதனால், அத்தப் பத்துராத்தல் உப்பின் தேவையையும் அவன் சிறிது சிறிதாகவே நிறைவேற்றி வைக்கவேண்டியிருக்கின்றது. ஆனால் சிறிது சிறிதாக அனுப்புகின்ற உப்போ உள்ளே தங்குவதில்லை; உடனுக்குடன் தண்ணீரோடு கலந்து வெளியேறிவிடுகின்றது. இதுபோல் ஷிட்காசத்தின் மொத்தத்தேவையாகிய பத்து ராத்தல் உப்பையும் ஒன்றாக (உட்கொள்ளமுடியாது; அல்லது அவ்வாறு) உட்கொள்ள முடிந்தாலும் முற்கூறிய முறைப்படி அத்தப்பத்து ராத்தல் உப்பும் வெளியேறிவிடும். ஆகவே அப்பொழுதும் உப்பின் தேவை —சதாகாலமும்— இருந்துகொண்டேயிருக்கின்றது. இந்த நிலைமையில் சரீரத்தை உப்பின் தேவையிலிருந்தும் ஒரு நாளும் விடுவிப்பதற்கில்லை. செய்த வேலையையே சதாகாலமும் செய்வதென்றால் அந்த வேலையை நினைக்கும்பொழுது கூட எமக்கு சலிப்புத் தோன்றுவது சகஜமல்லவா?

இவ்விதம் முடிவில்லாத துன்பம் ஏற்படுவதற்கும் ஒரு முக்கிய காரணமிருக்கின்றது. அதாவது:— இதுவரை நாம் உபயோகித்துவந்த உப்பு பச்சையுப்பாகும். (அதாவது அஞ்ஞான உப்பு). அக்காரணத்தினாலேயே அது நம்முடைய சரீரத்தினின்றும் கழுவிக்கொண்டே போகின்றது; அதனால் நமக்குப்போதும் என்ற திருப்தியு முண்டாவதில்லை. இனி இதற்கு என்ன பரிகாரஞ்செய்யலாம்? இந்த உப்புக்கு மோக்ஷங் கொடுத்தால் இத்தொல்லைகள் யாவும் நீங்கும். உப்புக்கு மோக்ஷங்கொடுத்தல் எவ்வாறு? என்று பலர்க்கு ஆச்சரியர்தோன்றும். ஆத்மாவுக்கு மோக்ஷமளிக்கும் முறை இருப்பது போலவே ஜடப்பொருள்களுக்கும் மோக்ஷமளிக்கும் முறையுண்டு. மோக்ஷம் பெற்ற ஞானிகள் அஞ்ஞானிகளுடன் சம்பந்தப்பட்டு அவர்களின் பந்தத்திற்கு உட்படாதது போல், மோக்ஷம் பெற்ற ஜடப்பொருளும் அவ்வாறு மோக்ஷம் பெறாத ஜடப்பொருள்களாகிய அஞ்ஞான (பச்சைப்) பொருள்களுடன் சம்பந்தம் * வைத்துக் கொள்வதில்லை.

* இங்கு படிப்போர்க்கு வேறொரு அரிய கருத்தும் தோன்றும். அதாவது:— "மோக்ஷம் பெறாத அஞ்ஞானிகளாலேயே உலகத்திற்கு சதாகாலமும் துன்பமுண்டாவதுபோல மோக்ஷம் பெறாத அஞ்ஞான ஜடப்பொருள்களாலேயே இச்சரீரத்திற்கும் துன்பமுண்டாகின்றது —நோய் உண்டாகின்றது— மரணமுண்டாகின்றது" என்பதே.

ஜட மோக்ஷம்.

ஜடம்பொருளுக்கு ஜடஅக்னியினால் கொடுக்கப்படுகின்ற மோக்ஷத்திற்கு ஜடமோக்ஷம் என்று பெயர்.

உதாரணமாக:— களிமண் நிறைந்த பூமியிலிருந்து சிறிது களி

மண்ணை எடுத்துவந்து அதனை ஒரு குதிரை வடிவமாகச் செய்து வெயிலில் காய வைத்து ஒரு பார்வையான இடத்தில் வைத்திருந்தால் அதை எல்லோரும் குதிரை என்று கூப்பிடுவார்கள். ஆனால், அக்குதிரையை முன் சொன்ன களிமண் பூமியில் சிறிது பள்ளந்தோண்டிப் புதைத்துவிட்டு அப்பால்- சிறிதுகாள் சென்றபின்-: பார்த்தால் குதிரையின் உருவம் சிறிதும் தோன்றாமல் அழிந்து பழைய களிமண்ணாகவே காணப்படும். இவ்விதம் பச்சைக் களிமண்ணினால் எவ்வளவுமுறை குதிரை செய்து களிமண்ணில் புதைத்தபோதிலும் அது பழைய களிமண்ணாகவே மாறிவிடுவதைத் தவிர்த்து குதிரையுருவத்தில் அதைக் காணமுடியாது. இவ்விதம் களிமண் குதிரையானது நாம் செய்த உருவத்தோடு இராமல் என்றது இனத்தோடு சேர்ந்து விடுகின்றது என்று ஆராயும் பொழுது அதற்கு நாம் ஜடமோக்ஷங்கொடாததுதான் காரணம் என்று புலப்படும்.

இனி, ஜடமான குதிரைக்கு ஜடமோக்ஷம் கொடுப்பது எப்படி? ஜடக்குதிரையை ஜடஅக்கினியில் குளிக்கச் செய்வதே ஜடமோக்ஷம் கொடுக்கும் முறையாகும். (அதாவது சூளையில் போட்டு பச்சைக் களிமண் குதிரையை கன்றுகப் புடம் போடவேண்டும் என்று பொருள்.) இதற்கே ஜடமோக்ஷம் என்று பெயர். இவ்விதம் மோக்ஷம் கொடுக்கப்பட்ட குதிரையை அதன் இனமான களிமண் பூமியிலே புதைத்துவிட்டு எவ்வளவு காள் சென்று பார்த்தாலும் அது களிமண்ணோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை; தன்னை குதிரையுருவத்தை விட்டுமாறுவதுமில்லை. இதுபோல் அக்கினியில் சாஸ்திரீய முறைப்படி கட்டி சுத்தெடுத்த உப்பை சரீரத்திலுள்ள கோசங்களில் எவ்வளவு தூரம் நிறைத்து விடுகின்றோமோ அவ்வளவு மட்டில் அந்த உப்பு சரீரத்திலேயே தங்கி விடுகின்றது. பிறகு (அவ்விதம் தங்கிய உப்பின் அளவு நீக்கி) பாக்கியுள்ள உப்பை சரீரத்தில் உபயோகித்துவந்தால் போதுமானது. இங்ஙனம் சுத்தி செய்துகட்டி சுத்தெடுத்தபின் உபயோகிக்கப்படுகின்ற உப்பானது எக்காரணத்தாலும் சரீரத்திலுள்ள உப்புகோசங்களை விட்டு வெளியே செல்வதில்லை என்பதற்கு ஒரு அடையாளம் உண்டு. இந்த உப்புசத்து சரீரத்தில் சேர்ந்தபிறகு அந்த சரீரத்தினின்றும் வெளியாகின்ற வெயர்வையிலும் சிறுநீரிலும் உப்புசத்து காணப்படமாட்டாது.

இதுபோலவே நம்சரீரத்தில் கார சுகார கோசங்கள் எவ்வளவிருக்கின்றனவோ அவ்வளவையும் "சுத்திசெய்து கட்டி சுத்தெடுக்கப்பட்ட கார சுகாரங்களைக் கொண்டு நிறைத்து விடுவேமாயின்" அதற்கப்பால் நம் சரீரத்திற்கு காரசுகாரங்களின் தேவையே காணப்படமாட்டாது. உலகத்திலுள்ள காரசுகாரங்களுக்கு இனி அங்கே இடங்கொடுப்பதற்கு சரீர நியமம் சம்மதிப்பதில்லை.

உப்பு கோசங்கள். இந்த மானிட சரீரத்தில் கார சுகார கோச

க்கள் 25 இருப்பதாக சித்தபுருஷர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். அதி போல் அண்டமாகிய இவ்வுலகத்திலும் 25 காரகூராங்கள்தான் அடங்கியிருக்கின்றன. எப்பொழுது சரீரத்திலுள்ள கார கூர கோசங்கள் சுத்திசெய்து மோக்ஷமளிக்கப்பட்ட 25. காரகூராங்களாலும் நிறைக்கப்படுகின்றனவோ அப்பொழுது இச்சரீரத்திற்குள்ளே பிரவேசிப்பதற்காக வெளியுலகத்திலிருந்தும் வருகின்ற 25 காரகூராங்களாகிய சைனியங்கள் இச்சரீரத்தில் பிரவேசிக்க முடியாது, இதனால் இச்சரீரத்தில் காரகூர யுத்தம் நின்று விட்டது. அத்த யுத்தம் நின்றதனால் 25 காரகூராங்களாலும் இச்சரீரத்திற்கு காசமில்லை என்பது நிரூபிக்கப்பட்டது. காரகூராங்களின் பெயர்களாவன :—

1 காச்சுவழலை. 2 பூவழலை. 3 கவச்சாரம். 4 சக்திகூராம். 5 யவகூராம். 6 காசகூராம். 7 ரகம்பகூராம். 8 சீனுச்சாரம். 9 வெங்காரம். 10 தும்பைகூராம் 11 அவரியுப்பு. 12 கல்லுப்பு. 13 வெடியுப்பு 14 இக்குப்பு. 15 வளையலுப்பு. 16 சவுட்டுப்பு. 17 நிலலவணம். 18 கத்தலவணம். 19 பிடாலவணம். 20 வித்துலவணம். 21 சூடனுப்பு. 22 பாறையுப்பு. 23 பொன்னம்பர். 24 மினம்பர். 25 பொட்டுலுப்பு.

இனி, இந்த உப்புகளைப்பற்றி மேனாட்டு பிரபல வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயங்களைச் சிறிதுகவனிக்கவேண்டியதாண்டு. பிரவிஸ்தி பெற்ற ஜெர்மன் டாக்டருடையலாட்சல்லர் தமது பையாகெமிஸ்டிரியில் (ஜீவாசாயன் வைத்திய நூலில்) தாம் கண்டுபிடித்த 12 உப்புகளைமட்டும் நிரூபித்திருக்கிறார். மேற்12 உப்புகளாலேயே சகலவிதமான கோளாறுகளும் சௌக்கியஞ் செய்யலாமென அவர் அபிப்பிராயப்படுகின்றார். தமது இந்திய காட்டுச் சித்தபுருஷர்களின் ஆராய்ச்சி அனுபவத்தையும் இந்த டாக்டருடைய ஆராய்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 12 உப்புகளின் ஆராய்ச்சியோடு நின்றுவிட்ட சுச்சருடைய ஆராய்ச்சியைப் பார்க்கிலும் 25 உப்புகள்வரை கண்டுபிடித்து அனுபவத்துடன் பேசுகின்ற சித்தர்களின் வசுக்கு எவ்வளவு தூரம் சிறந்ததென்பதைத் தெரிந்துகொள்ளலாம். இனி, இந்த உப்பைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற டாக்டர் H. L. ஹாரிஸ்ஸின் அபிப்பிராயத்தையும் இங்கு தெரிவித்துவிட்டு இவ்விருவர்களின் அபிப்பிராயத்தையும் நாம் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கலாம் என்பதைப் பிறகுகவனிப்போம். மிஸ்டர் ஹாரிஸ் சொல்லுகின்றார் :—

கடந்த பத்திருபது வருஷங்களாக ஹிருதய ரோகமும், மற்றும் அதனைச்சம்பந்தித்த வேறுசில நோய்களும் விருத்தியாகி வருவதன் காரணம் உப்பு அதிகமாக உபயோகித்து வந்ததன் பயனேயாகும். ஒரு மனிதன் சாதாரணமாகத் தனக்குத் தேவையுள்ளதைப் பார்க்கினும் அநேகமாக பத்திருபதுபங்கு— உப்பைஉபயோகித்து வருகின்றான். இந்த உப்பு கண்டத்து அதிகமாவதால் அது இரத்தத்தினின்றும் ஜல அம்சத்தை இழுத்து

விடுகின்றது. அது, ரூட்டையும் சோணை சக்தியையும் குறைக்கி
ன்றது. ரத்தவாஹிகளிலும்; ஹிருதய பதார்த்தத்திலும் கேட்டையுண்டா
க்கின்றது. இவை இவ்வாறுக்— கால அளவில் முதுமை வந்துசேருகி
ன்றது. தினம் 1க்கு 15முதல் 30 கிரெயின்வரை உப்பை –அதிகமாக– உப
யோகித்தால் அது தோஷித்தையுண்டாக்கும். உப்பினுடைய தோஷம்
குறைவதற்கு தண்ணீரை தாராளமாக குடிப்பது நல்லது

இனி, ஸுஸ்லர் கூறுகின்ற 12 உப்புகளின் பெயர்களையும் பொது
வே உப்புகளின் குணங்களைப்பற்றி அவர் தெரிவிக்கின்ற அபிப்பிராயங்க
ளையும் மிஸ்டர் ஹாரிஸ்வின் அபிப்பிராயத்தோடு சேர்த்துப் பார்த்துப்
பின்னர் சித்தர்களின் அநுபவ ஆராய்ச்சிக்கு இவர்கள் எவ்வளவு தூரம்
நெருங்கி வருகிறார்களென்பதை கவனிப்போம்.

ஸுஸ்லரின் 12 உப்புகளாவன :—

1. கல்கேரியா ப்ளோர்.	7. கால்லு ஸல்ப்.
(Calcarea Fluorica)	(Kali Sulphuricum)
2 கல்கேரியா போஸ்.	8. மெக்னீஷியா போஸ்.
(Calcarea Phosphorica)	(Magnesia Phosphorica)
3. கல்கேரியா ஸல்ப்.	9. நேட்ரம் ம்யூர்.
(Calcarea Sulphurica)	(Natrum Muriaticum)
4. பேர்ரம் போஸ்	10. நேட்ரம் போஸ்.
(Ferrum Phosphoricum)	(Natrum Phosphoricum)
5. கால்லு ம்யூர்.	11. நேட்ரம் ஸல்ப்.
(Kali Muriaticum)	(Natrum Sulphuricum)
6. கால்லு போஸ்.	12. ஸிலீஷியா.
(Kali Phosphoricum)	(Silicea)

இனி, இரண்டாவது கூறப்பட்ட மிஸ்டர் ஹாரிஸ் 15 கிரெயின்
முதல் 30 கிரெயின்வரை உப்பை உபயோகிப்பதுகூட மிக மிக அதிகமென்
றே அபிப்பிராயப்படுகின்றார். இந்த 30 கிரெயினும் சேர்ந்து
ஏறக்குறைய தூரைக்கால் ரூபா எடையாகும். இவ்விதம் உப்பை அதி
கமாக உட்கொண்ட குற்றம் நீங்குவதற்காக தண்ணீரை தாராளமாய்
வயிற்றுக்குள் சேர்ப்பதும் அவர்தெரிவிக்கின்ற பரிகாரமாகும். இந்திய
சித்தர்களின் அபிப்பிராயமுழுவதையும் படிப்போர்க்கு இதன் உண்மை புல
ப்பட்டிருக்கும். சித்தர்களின் அபிப்பிராயத்தை யறியாதவர்கள் "மிஸ்
டர் ஹாரிஸின் அபிப்பிராயமே சிறந்ததென" கம்பி, "மனித சரீரத்திற்கு
உப்பே தேவையில்லை" என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள். ஆனால்,
மனித சரீரத்திலுள்ள உப்புகோசங்கள் நிறைவதற்கு எவ்வளவு உப்புகள்
தேவையாயிருக்குமோ அவ்வளவு உப்புகளும் மேலே தெரிவிக்கப் பட்ட
வண்ணம் சுத்திசெய்து கட்டி மோகூ உப்பாகச் செய்து அவசியம் சரீரத்
தில் கொடுத்தவேண்டுமென நமது சரீரநியமம் தெரிவிக்கின்றது. உப்

தோசங்கள் மேற்கூறியவாறு செய்யப்பட்ட உப்புகளால் நிறைக்கப் படாவிட்டால் உப்புகளின் தேவை சரீரத்திற்கு இருந்துகொண்டே இருக்கும். அவ்வாறு உப்புகளின் தேவை இருக்கும்வரை ஒரு மனிதன் உப்பை விரும்பாமலிருக்க முடியாது. அல்லது ஒரு மனிதன் உப்பின்தேவை யற்றவனிருப்பதாகச் சொல்லிக்கொண்டால், அவன் பசியுள்ளவன் அன்னத்தை விரும்புவதில்லை என்பதுபோலாகும். ஆதலால், இந்த சரீரம் எந்த எந்த திரவிய அணுக்களால் நிரும்மிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அந்தத் திரவியங்களெல்லாம் சரீரத்தினிடத்தில் இருக்கவேண்டியதும், அவ்விதத் திரவிய அணுக்களெல்லாம் சரீரப்பாதுகாப்பிறகு ஒரே சீலமையில் அததன் ஸ்தானத்தில் நிலாகிக்கப்பட்டதும் கௌரவிக்கப்பட்டதுமாகும். இதனால் உப்புகள் சரீரத்திற்குத் தேவையில்லாத பதார்த்தங்களென்றும் அவைகளைக் குறைக்கூர்தோறும் சரீர ஆரோக்கியம் பெருகும் என்றும் மிஸ்டர் ஹாரிஸ் போன்றவர்கள் அபிப்பிராயப்படுவது மூற்றும் தவறில்லாததல்ல. இவ்விஷயத்தில் மிஸ்டர் ஹாரிஸ்வின் அபிப்பிராயமானது சரீரப்பிரகிருதியின் (இயற்கை) அமைப்பிற்குப் பொருந்திய தல்லவென்றும் உப்புகள் சரீரத்தில் மிகுதிப்படாமல் எளாளமான தண்ணீர் குடிப்பது கவமாகுமென்றும், அதனால் உப்புகள் கரைந்து வெளியே சென்றுவிடுமென்றும் அவர் தெரிவித்துள்ள அபிப்பிராயத்தை காம் ஆதரித்து அதனால் எவ்விதமான நன்மை தீமைகளுண்டாகுமென்பதையும் பகூபாதமின்றி கோக்குவோம்.

களிமண்ணினால் செய்யப்பட்ட பச்சைக்குதிரையானது மீண்டும் களிமண்ணாகவே கலந்து போவதுபோல "உப்பு தண்ணீரில் கரைந்து போகுமென்று" மிஸ்டர் ஹாரிஸ் சொன்னது உப்பின் வெண்மையான அம்சமாகிய ஒரு பாகத்திற்குப் பொருந்தும்; அது சுத்திசெய்யப்படாத உப்பினுடையவோ அல்லது சுத்திசெய்தும் மோகூமளிக்கப்படாத உப்பினுடையவோ குணமாக அங்கீகரிக்கலாம். சுத்தி செய்து கட்டி மோகூமளிக்கப்பட்ட உப்புகள் மீண்டும் தண்ணீரோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை என்றும், அவை சரீரத்தை விட்டு வெளியே இறங்கமாட்டா என்றும் அதற்கு அடையாளம் அத்தகைய சரீரத்தினின்றும் வெளிப்படுகின்ற வெயர்வை, சிறுநீர் முதலியவற்றிற்கூட உப்பின்சத்து காணப்படமாட்டா வென்றும் முன்னரே தெரிவித்துள்ளோம்.

இனி, 12 உப்புகளாலேயே மனித சரீரத்திலுண்டாகின்ற சகல நோய்களையும் அகற்றி விடலாமென்று தெரிவித்த டாக்டர் ஸுஸ்லருடைய அபிப்பிராயமும் மூற்றுப்பெற்ற ஆராய்ச்சியினின்றும் எழுந்ததல்ல.

12 உப்புகளால் மானிட தேகத்திலுண்டாகின்ற சகல நோய்களையும் தீர்த்துவிடலாமென்று தீர்மானிக்கின்ற மிஸ்டர் ஸுஸ்லருடைய அபிப்பிராயம் அவரைப்பொருத்த மட்டில் பூர்த்தியான ஆராய்சியாக

வைத்துக்கொண்டு தொழில் நடத்துவதில் நமக்கொன்றும் ஆக்ஷேபிப்பதற்கில்லை.

ஆனால், நமது இந்திய ஆயுர்வேத சாஸ்திரங்களின் கருத்துப் படிக்கும், சித்தர்களின் சித்தாந்தப்படிக்கும் பார்க்கும்பொழுது மனிதசரீரத்தில் இந்தப்பன்னிரண்டைத்தவிர்த்து இன்னும் பல உப்புகளின் தேவையோடு கூடிய கோசங்கள் அடங்கிக் கிடக்கின்றனவென்றும், அவைகளையும் "சுத்திசெய்த உப்புகளால் நிறைத்தாலொழிய" அவ்வுப்புகளின் தேவை காரணமாக சரீரத்திலுண்டாகின்ற பலவாருன நோய்களை நீக்கமுடியாதென்றும் நாம் பன்முறை விளக்கியுள்ளோம்.

உபரசநிரூபணம்.

இனி, மூன்தெரிவிக்கப்பட்ட விஷங்களைப்போலவும் சரீரத்தின் கல்வாழ்விற்குத்தேவையாயிருக்கின்ற உபரசங்களை நிரூபிப்போம்.

உபரசங்கள் உலகெங்கும் பரவிக்கிடக்கின்றன. ஒவ்வொரு உபரசங்களுக்கும் சரீரம் இடங்கொடுக்கின்றது. மனிதனுடைய ஒவ்வொரு தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதன்மூலமாக இடையூறுகளெல்லாம் நீக்கிக்கொள்வதற்கு இவ்வுபரசங்களே காரணமாகின்றன. இந்த உபரசங்கள் மொத்தம் 120. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணங்கள் தனித்தனியே அமைந்துள்ளன. ஆதலால், இந்த உபரசங்களையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து தேடிக் கண்டு பிடித்து சித்தர்களுடைய ரசாயனசாஸ்திர நியமப்படி சோதித்துக்கட்டி சத்தெடுத்து சிந்தூரித்து அவைகளால் முறையே 120 உபரசகோசங்களும் நிறையும்படி சமமாகமாகச்செலுத்திவிட்டால் மூன் தெரிவித்த விஷாவின் உதாரணத்தில் விளக்கிய வண்ணம் (விஷாவினுள்ளே நிறைந்திருக்கின்ற மணலானது வெளியிலிருந்து வருகின்ற மணலைத்தடுப்பதுபோல), சரீரத்தில் நிறைக்கப்பட்ட இந்த உபரச அணுக்கள் வெளியிலிருந்தும் சரீரத்திற்குள்ளே பிரவேசிப்பதற்காக வருகின்ற அசுத்த (சுத்தம் செய்யப்பெறுத) உபரச அணுக்களை தழைய இடங்கொடுக்காமல் தடுக்கின்றன. இவ்விதம் செய்யும் பொழுது உபரசங்களால் இந்த சரீரம் அழிவதேயில்லை.

120 உபரசங்களாவன :— 1 தூரிசு 2 பொன்னிமிளை 3 கஞ்சநிமிளை 4 ரஜதகிமிளை 5 லோஹநிமிளை 6 காகநிமிளை 7 ஸ்வர்ணுப்ரகம் 8 ரக்தாப்ரகம் 9 கிருஷ்ணுப்பிரகம் 10 நீலாப்பிரகம் 11 ச்வேதாப்பிரகம் 12 ஊசிக்காந்தம் 13 அரக்குக்காந்தம் 14 உருளைக்காந்தம் 15 கல்காந்தம் 16 கற்பூர சிலாஸத்து 17 கல்கார் 18 ஸஹஸ்ரவேதி 19 கல்மதம் 20 நீலாஞ்சனக்கல் 21 கருங்கல் 22 நீலஸ்படிகக்கல் 23 சுக்கான்கல் 24 ஈரக்கல் 25 ரஸவர்த்தம் 26 கருடக்கல் 27 ஓடு 28 செங்கல் 29 மனிதஎன்பு 30 தலேரோமம் 31 கண்டோடு 32 கத்தையோடு 33 சிப்பியோடு 34 ஆமையோடு 35 முட்டையோடு 36 ஆனைக்கொம்பு 37 பன்றி

தீநேந்தை (பன்றியின் கொம்பு) 38 ஆட்டுக்கொம்பு 39 மாட்டுக் கொம்பு 40 மனிதன்பல்லு 41 புள்ளிமான் 42 பூராகம் 43 இந்திரகோபம் (ஒரு பூச்சி) 44 தவளை 45 கோழி 46 செவ்வட்டை 47 காடி 48 சங்கு 49 முத்துச்சிப்பி 50 முத்து 51 பவழம் 52 கோமேதகம் 53 புஷ்பராகம் 54 வைரம் 55 மரகதப்பச்சை 56 நீலம் 57 மாணிக்கம் 58 வைடூரியம் 59 கண்டகதேலை 60 சூடாலக்கல் 61 மாக்கல் 62 தீக்கல் 63 மஞ்சட்கல் 64 தவளைக்கல் 65 சிலாவங்கம் 66 சிலாரூகம் 67 அண்ணபேதி 68 அஸ்திபேதி 69 சுவர்ணபேதி 70 மாம்ஸபேதி 71 உவர்மண் 72 கல்லிட்டம் 73 கருமண் 74 செம்மண் 75 சுத்தமண் 76 முடஆட்டுக்கால் 77 கருவண்டு 78 பன்றிமுள் 79 எலிமுன் 80 கடலதுறை 81 மீன்என்பு 82 முள்சுவரு 83 கோரோசனை 84 ரசுப்பச்சை 85 பச்சை 86 முத்தாப்பழம் 87 வெள்ளாட்டுக்கான் 88 கறுப்புச்சேலை 89 காகதேலை 90 காண்டாமிருகக்கொம்பு 91 கஸ்தூரிமிருகக்கொம்பு (கஸ்தூரிமான்கொம்பு) 92 மத்தாரதேலை 93 கடல்பாசி 94 லாடக்கிராமம் 95 மாம்ஸதேலை 96 மாத்தாக்கல் 97 காச்மீரக்கல் (கலல்பழிகம்) 98 செம்புமண் 99 தூல்காலி 100 காகமண் 101 வங்கமண் 102 இப்பமண் 103 வெள்ளிமண் 104 தங்கமண் 105 இரும்புமண் 106 மயில்இறகு 107 சருந்தக்கான் 108 கானாக்கல் 109 குருத்தக்கல் 110 ரசதக்கல் 111 சீதூமமலை 112 காகமலை 113 வாகமலை 114 வெள்ளியமலை 115 இரும்புமலை 116 தாமமலை 117 வெங்கலமலை 118 பித்தளைமலை 119 செம்புமலை 120 காகசாண்டு.

இவைகளைச் சுத்தம் செய்து சரீரத்தில் தேய்த்து மேற் சொல்லிய திரவியங்களுடைய யுத்தம் நீங்கமல் நடத்து விட்டாலும், மூன்சொன்ன விஷங்களான, உப்பகம், உபரசங்கள் இவைகளோடுபோல் சரீரத்தின் மாசுவது சுகவாழ்விற்கு கவலோதரங்களும் தீதையாகின்றன. அத்தீதனை காரணமாக இனி, கவலோதரங்களின் யுத்தம் சரீரத்தில் நகமாதருக்க வேண்டி அவைகளையும் சுத்தி செய்து சுட்டம் சுத்தமதித்து சரீரத்தி லுள்ள "கவலோஹ கோசங்களில்" நிறைத்தவேண்டியது அவசியமாகிறது. அவ்விதம் கவலோஹங்களையும் சுத்திசெய்து சரீரத்தில் செலுத்திவிட்டால் பிறகு இச்சரீரத்தைக் கவலோஹக்களியாவதிருக்கும் யுத்தஞ்செயது அழிக்கமுடியாது.

9 லோஹக்களாவன:—1. பொன் அல்லது தங்கம். 2. வெள்ளி 3. தாமரம். 4. சாரீயம. 5. வெள்ளியம். 6. ராகம். 7. பித்தளை அல்லது தரா (வெண்கலம்). 8. இருப்பு. 9. உருக்கு.

இவ்விதம் கடவுளின் படைப்பிலுள்ள 227 திரவியங்களையும் முறைப்படி அவ்வவற்றின் கோசங்களில் நிறைத்து விட்டால் இனி 227 திரவியங்களும் இந்த சரீரத்தில் செல்வதற்கு இந்த சரீரம் சிறிதும் இடங்கொடாது. எப்பொழுது சரீரமானது மேற்சொல்லப்பட்ட திரவியங்களை உள்ளே பிரவேசிப்பதற்கு இடங்கொடாமலிருக்குமோ அப்பொழுது இந்த சரீரம் பிரகிருதியினது திரவியங்கள் (பௌதிகப்பொருள்கள்) தலையற்றதாகிவிடும்!



SATHAVATHANAM

P. Krishnaswamy Pavalar.